விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 260 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 20 வெள்ளிக்கிழமை (05.09.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## 2025ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பெறுபேறு

### யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் தேசிய ரீதியில் தமிழ் மொழியில் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

2025ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் ஆனந்தசோதி லக்சயன் அகில இலங்கை ரீதியில் தமிழ் மொழிமூலமாக முதலிடம் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

மாணவன் ஆனந்தசோதி லக்சயன் 194 புள்ளிகளைப் பெற்றமை யாழ். இந்து 15ஆம் பக்கம் பார்க்க



### 51,969 பேர் சித்தி

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டுக்கான தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையின் வெட்டுப்புள்ளிகளில் மொத்தம் 51, 969 பேர் (17.11%) சித்தியடைந்துள்ளதாக இலங்கை பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிங்கள மொழி மூலப் பாடத்திற்கு 140 வெட்டுப் 15ஆம் பக்கம் பார்க்க

### வெட்டுப்புள்ளிகள்

(கொழும்பு)

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் நேற்று முன்தினம் நள்ளிரவு வெளியிடப்பட்டன.

கடந்த மாதம் 10ஆம் திகதி நடைபெற்ற தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கு 307,951 மாணவர்கள் தோற்றியிருந்தனர்.

15ஆம் பக்கம் பார்க்க

### யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை
### 141 பேர் வெட்டுப்புள்ளிக்கு மேல் எடுத்து சாதனை

(யாழ்ப்பாணம்)

வெளியாகியுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் 141 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இதேவேளை 211 மாணவர்கள் நூறு புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். (ம-7)

### யாழ்.புனித ஜோன் பொஸ்கோ
### 140 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் சித்தி

(யாழ்ப்பாணம்)

வெளியாகியுள்ள புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் 140 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சாதனை படைத்துள்ளனர். (ம-7)

# செம்மணி விவகாரத்தில் அரசாங்கம் தலையிடாது

### அனைத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்
### அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தில் அரசாங்கம் தலையிடாது. ஆனால் அனைத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)



## காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் நீதியான விசாரணை மேற்கொள்ளப்படும்



### நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார

(மட்டக்களப்பு)

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் நீதியான விசாரணை மேற்கொள்ளப்படும் என நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு குருக்கள்மடம் மனித புதைகுழி வளாகத்திற்கு நேற்று கள விஜயம் மேற் 15ஆம் பக்கம் பார்க்க

### யாழ்ப்பாணம் நாவற்குழியில்
## நவீன கடலுணவு பதப்படுத்தும் தொழிற்சாலை திறப்பு

(யாழ்ப்பாணம்)

நாவற்குழியில் அமைக்கப்பட்டுள்ள நவீன கடலுணவு பதப்படுத்தும் தொழிற்சாலையான அன்னை ஹோல் 15ஆம் பக்கம் பார்க்க



## 4 மனித எச்சங்கள் செம்மணியில் அடையாளம்

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் புதிதாக 4 மனித எச்சங்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் 15ஆம் பக்கம் பார்க்க



### காணாமல்போனோர் விவகாரம்
## விசாரணைகளை நடத்த தகைமையுடன் கூடிய நபர்களை நியமிக்க அனுமதி

(கொழும்பு)


காணாமல்போன ஆட்கள் தொடர்பான முறைப்பாடுகள் பற்றிய விசாரணைகளை நடத்துவதற்காக தகைமையுடன் கூடிய நபர்களை உள்ளடக்கிய குழுக்களை நியமிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2016ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் 15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடையாளம் காண உதவுக



(யாழ்ப்பாணம்)

கைதடி அரச முதியோர் இல்லத்தில் தெல்லிப்பழை, வலிகாமம் வடக்குப் பிரதேச செயலாளர் ஊடாக 70 வயது மதிக்கத்தக்க ஆண் முதியவர் ஒருவரினை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் காவு வண்டியில் அழைத்து வரப்பட்டு 02.09.2025 இல்லத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எனினும் குறித்த முதியவர் தன்னைப்பற்றிய தகவல்கள் எதனையும் தெரிவிக்க இயலாத நிலையில் உள்ளார்.

இவர் குறித்த தகவல் தெரிந்தவர்கள் 077 368 1428 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்மாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## கிளிநொச்சி மாசார் அ.த.க பாடசாலை புதிய சாதனை

(பளை)

2025 ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ள நிலையில் கிளி/மாசார் அ.த.க பாடசாலை புதிய சாதனையைத் தனதாக்கியுள்ளது.

குறித்த பாடசாலையூடாக 09 மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய நிலையில் அவர்களில் 07 பேர் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சாதனை படைத்துள்ளனர். (ம-7)

## வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவி

### மாவட்ட ரீதியில் முதலிடம்



வெளியாகியுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவி அரோனிக்கா ரேச்சல் 189 புள்ளிகளைப் பெற்று மாவட்ட ரீதியில் முதலாம் இடத்தையும் வடமாகாண ரீதியில் இரண்டாம் இடத்தையும் அகில இலங்கையில் தமிழ்மொழி மூலமான பரீட்சையில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார். (ம-7)

## நல்லூர் சிவகுரு ஆதீனத்தில் ஆனந்த அனுபவப் பயிற்சி

வாழும் கலை அமைப்பின் ஏற்பாட்டில் குருதேவ் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் அவர்களின் "வாழும் கலை" ஆனந்த அனுபவப் பயிற்சியானது நாளைமுதல் திங்கட்கிழமை (8) வரை மாலை 5.00 மணி முதல் நல்லூர் சிவகுரு ஆதீனத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் குருதேவ் அவர்கள் அருளிய சக்தி வாய்ந்த சுதர்ஷன் கிரியா, பிராணாயாமம், தியானம் உள்ளிட்ட மன அமைதி, உடல் ஆரோக்கியம், நோய் எதிர்ப்பு சக்தி, ஆழ்ந்த உறக்கம் நல்கக்கூடிய பலவேறு பயிற்சிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (ம-7)


## தேவை

புத்தகப்பண்பாடு மேம்பட சேவை நோக்கில் வீடு வீடாக சிறுவர் புத்தகங்களை விநியோகிப்பதற்கு இளைஞர்கள் (இருபாலாரும்) தேவை. தகுந்த ஊதியம் வழங்கப்படும்.

புத்தகப்பண்பாட்டுப் பேரவை

இல.68, நீதிமன்ற வீதி, மல்லாகம்.

தொலைபேசி : 077 885 1989


## இலங்கைத் தமிழர்கள்

# சட்டபூர்வமாக இந்தியாவில் தங்குவதற்கு மத்தியஅரசு அனுமதி

2015 ஜனவரி 9ஆம் திகதிக்கு முன்பு உரிய ஆவணங்கள் இன்றி இந்தியாவுக்குள் நுழைந்து, அரசிடம் அகதிகளாகப் பதிவு செய்த இலங்கைத் தமிழர்கள், சட்டபூர்வமாகத் தங்குவதற்கு இந்திய மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

போர் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையை விட்டு வெளியேறிய இலங்கைத் தமிழர்கள் தமிழ் நாட்டில் பல்வேறு முகாம்களில் தங்கியுள்ளனர்.

இவர்கள் இந்தியாவில் தாங்கள் சுதந்திரமாக வாழ வேண்டும் என அரசுக்கு கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்நிலையில் 2015 ஜனவரி 9ஆம் திகதிக்கு முன்பு உரிய ஆவணங்கள் இன்றி இந்தியாவுக்குள் நுழைந்து அரசிடம் அகதிகளாக பதிவு செய்த இலங்கைத் தமிழர்கள் சட்டபூர்வமாகத் தங்குவதற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கை தமிழர்கள் இனி சட்டவிரோத குடியேறிகள் அல்ல.

சமீபத்தில் நடை முறைப்படுத்தப்பட்ட குடிவரவு மற்றும் வெளிநாட்டினர் சட்டத்தின் கீழ் உள்ள தண்டனை விதிகளில் இருந்தும் இலங்கைத் தமிழர்களுக்கு மத்திய அரசு விலக்கு அளித்துள்ளது.

இலங்கையில் நடந்த உள்நாட்டு போர் காரணமாகவும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாகவும் இலங்கை தமிழர்கள் பலர் உலக நாடுகளில் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர் பல்வேறு நாடுகள் அவர்களுக்கு குடியுரிமையும் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமானது

# எந்தக் கலந்துரையாடலும் மேற்கொள்ளத் தேவையில்லை

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

கச்சதீவு தொடர்பாக எந்தவொரு கலந்துரையாடலும் மேற்கொள்ள தேவையில்லை எனவும் ஏனெனில் கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமானது எனவும் அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "எமது அரசாங்கம் ஆரம்பிக்கப்பட்டு பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் ஜனாதிபதி அண்மையில் வடக்கில் பல அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்துவைத்தார். வடக்கு விஜயத்தின் போது ஜனாதிபதி கச்சதீவுக்குச் சென்றிருந்தார். ஜனாதிபதி கச்சதீவுக்கு விஜயம் செய்தமை விசேட விடயமல்ல.

தற்போது தென்னிந்திய அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் குழுக்கள் தங்கள் அரசியல் இலாபத்தினை இலக்காகக் கொண்டு கச்சதீவு விவகாரத்தினைக் கருவியாக பயன்படுத்துகின்றனர்.

கச்சதீவு தொடர்பாக எந்தவொரு கலந்துரையாடலும் மேற்கொள்ள தேவையில்லை.

ஏனெனில் கச்சத்தீவு எமக்கு சொந்தமானது" என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (ம-7)

## செம்மணி...

கொழும்பிலுள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று வியாழக்கிழமை (04) இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தில் அரசாங்கம் தலையிடாது. ஆனால்பொலிஸ் விசாரணைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு தேவையான வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்படும். நீதிமன்றத்துடன் தொடர்புடைய விவகாரத்தில் அரசாங்கத்தின் தலையீடு தேவையற்றதாகும்.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது. குறித்த அறிக்கையில் செம்மணிக்கு சுயாதீன விசாரணை பொறிமுறையை நிறுவுமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அத்தோடு சர்வதேச நிபுணத்துவத்தின் அவசியமும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. எனவே அதனுடன் தொடர்புடைய விடயங்கள் நீதிமன்றத்துக்கே அறிவிக்கப்படும். நீதிமன்றம் சுயாதீனமான நிறுவனமாகும் என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே நீதிமன்ற நடவடிக்கைகளுக்கான வசதிகள் அரசாங்கத்தால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக விசேட குழுவொன்றினால் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மறுபுறம் பொலிஸ் விசாரணைகளும் இடம் பெற்று வருகின்றன. நீதிமன்றத்துக்கு அறிவிக்குமாறு அதற்கான தினம் ஒதுக்கப்பட்டுள்ளது. அவற்றுக்கு நாம் இடமளித்திருக்கின்றோம். அதற்கமைய அந்த விவகாரத்தில் நியாயமான செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாக நம்புகின்றோம் என்றார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதாள உலகக் குழுக்களை அடக்கும் தீவிர முயற்சியில் அரசு!

## அடைக்கலம் கொடுத்த அரசியல்வாதிகள் அச்சத்தில்

(கொழும்பு)

**கைது செய்யப்பட்ட பாதாள உலகத் தலைவர்கள் தமக்கு நெருக்கமான அரசியல் தலைவர்களை காட்டிக் கொடுத்து வருவதாக பொலிஸ் விசாரணை பிரிவினர் தெரிவித்துள்ளனர்.**

இலங்கையில் பாதாள உலகக் குழுக்களின் அட்ட காசத்தை அடக்கும் தீவிர முயற்சியில் அரசாங்கம் முழு மூச்சாக செயற்பட்டு வருகிறது.

அதற்கமைய அண்மையில் இந்தோனேஷியாவில் தலை மறைவாகி இருந்த முக்கிய தலைவர்கள் கைது செய்யப் பட்டிருந்தனர். மேலும் பல தலைவர்களை கைது செய்யும் இரகசிய நடவடிக்கைகளை வெளிநாடுகளில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அவர்களின் கைதினை அடுத்து தென்னிலங்கை அரசியலில் பெரும் பரபரப்பு நிலை ஏற்பட்டுள்ளதுடன், அடுத்து யார் கைது செய்யப் படுவார்கள் என்ற எதிர்பார்ப்பு வலுப்பெற்றுள்ளது.

இவ்வாறான நிலையில் கடந்த ஆட்சியின் போது சட்ட விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் அச்ச நிலையில் உள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நந்தன பத்மகுமார தெரிவித்துள்ளார்.


இந்த நிலையில் அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்த அரசியல்வாதிகள் மிகவும் பயப் படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜுலம்பிட்டிய அமர மற்றும் வம்போட்டா போன்ற பல குற்றவாளிகள் அரசியல்வாதிகளால் பராமரிக்கப்பட்டனர். எனவே, இப்போது அரசாங்கம் தலையிட்டு நாட்டில் செயற்படும் பாதாள உலகத்தை அடக்குவதற்கான நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது.

வெளிநாடுகளில் வாழ்ந்த பாதாள உலக குழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டு, வேட்டையாடப் பட்டு இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர்.

கைதான பாதாள உலக குழு உறுப்பினர்கள் தற்போது நிறைய விடயங்களை வெளிப்படுத்த தொடங்கியுள்ளனர். (நி)

# 18 புதிய மேல்நீதிமன்ற நீதிபதிகளை நியமித்தார் ஜனாதிபதி அநுர



(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் 18 புதிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று முன்தினம் (செப்ரெம்பர் 03, 2025) ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதியினால் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளன.

நியமிக்கப்பட்டவர்களில், 17 விசேட தர நீதித்துறை அதிகாரிகளும் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஒரு சிரேஷ்ட அரச சட்டத்தரணியும் உள்ளடங்குகின்றனர். அரசியலமைப்பின் 111(2) ஆம் சரத்தின் படி ஜனாதிபதி இந்த நியமனங்களை மேற்கொண்டார்.

புதிதாக மேல் நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கப் பட்டவர்களின் விபரம் பின்வருமாறு:

மாவட்ட நீதிபதிகள்: எஸ். எஸ்.கே. விதான, ஏ.எம்.ஐ. எஸ். அத்தநாயக்க, ஏ.எம். எம். றியால், டி.பி. முதுன் கொடுவ, ஜே. கஜனி தீபலன், ஜி.என். பெரேரா, ஏ. ஜுட்சன், டபிள்யூ. கே.டி.எஸ். வீரதுங்க, ஆர்.பி. எம்.டி.ஆர். வெலிகொடபிட்டிய, டி.எம். ஆர்.டி. திஸாநாயக்க, மற்றும் எம்.ஐ.எம். ரிஸ்வி.

மேலதிக மாவட்ட நீதிபதிகள்: எஸ்.பி.எச்.எம்.எஸ். ஹேரத், எச்.எம்.பி.ஆர். விஜேரத்ன, மற்றும் டி.எம்.ஏ. சேனவிரத்ன.

நீதிச் சேவை ஆணைக் குழுவின் சிரேஷ்ட உதவிச் செயலாளர்: டி.எம்.டி.சி. பண்டார.

நீதவான்கள்: ஏ.ஏ. ஆனந்த ராஜா மற்றும் கே.டி.என்.வி. லங்காபுர.

சிரேஷ்ட அரச சட்டத்தரணி: ஏ. ஜயலக்ஷி டி சில்வா.

# தெங்கு செய்கையாளர்களுக்காக புதிய காப்புறுதித் திட்டம்

(கொழும்பு)

தெங்கு செய்கையாளர்களுக்காக புதிய காப்புறுதி திட்டத்தை விவசாய மற்றும் கமநலக் காப்புறுதி சபை அறிமுகப்படுத்தியுள்ளது.

புதிய உற்பத்தி, மீள் உற்பத்தி, உப உற்பத்தி போன்ற மானிய முறைகளின் மூலம் வழங்கப்படும் தென்னை விதையை 5 வருடங்கள் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்து பாதுகாக்கும் விதமாக இந்த திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த காப்புறுதி காலம் 15ஆவது நாளில் இருந்து 1 வருடம் வரை நடைமுறைப்படுத்தப்படும்.

காப்புறுதி தவணைக் கட்டணமாக ஒரு தென்னை மரத்திற்காக 67.50 ரூபா என்பதுடன் மொத்த காப்புறுதி 550 ரூபாவாக வழங்கப்படும். தெங்கு பயிர்ச் செய்கை சபை, விவசாய மற்றும் கமநலக் காப்புறுதி சபை ஆகியவற்றின் ஒன்றிணைந்த திட்டமாக இது அமைந்துள்ளது.

இந்த காப்புறுதி யோசனை முறை மூலம் வறட்சி, வெள்ளம், கன மழை, சூறாவளி, மண் சரிவு, காட்டு யானைகளின் தாக்கம், காட்டு மிருகங்களின் தாக்கம், மின்னல், பீடைகளின் தாக்கம் போன்ற நிலைமைகள் தெங்கு உற்பத்திக்கான காப்புறுதி திட்டத்தின் கீழ் உள்வாங்கப்படுகின்றன. (நி)

# ஒரு வருடத்தில் 200 சிறுவர்கள் புற்றுநோயால் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஆண்டுதோறும் சுமார் 200 சிறுவர்கள் புற்றுநோயால் உயிரிழப்பதாக தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு திட்டத்தின் ஆலோசகர் சமூக மருத்துவர் சுராஜ் பெரேரா தெரிவித்தார்.

முறையான மருத்துவ சிகிச்சை மூலம் இந்த நிலைமையைத் தணிக்க முடியும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இந்தக் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

அவர் கூறியதாவது, 2022 ஆம் ஆண்டில், அடையாளம் காணப்பட்ட அனைத்து புற்றுநோய் நோயாளிகளில், 904 பேர் சிறுவர்கள் ஆவர்.

கடந்த 15 ஆண்டுகளில் தரவுகளைப் பார்க்கும்போது, சிறுவர் பருவ புற்றுநோய் நோயாளிகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு இல்லை என்பது தெளிவாகக் காட்டுகிறது.

இந்த எண்ணிக்கை பொதுவாக 600 முதல் 800 வரையிலான வரம்பிற்குள் உள்ளது.

இப்போது, ஆண்டுதோறும் சுமார் 900 சிறுவர் பருவ புற்றுநோய் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

2019 ஆம் ஆண்டில் சுமார் 200 சிறுவர்கள் புற்றுநோயால் இறந்துள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக சுமார் 200 சிறுவர்கள் புற்றுநோயால் இறப்பதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப் பட்டுள்ளது.

சரியான நேரத்தில் மருத்துவ சிகிச்சை பெற்றால் சிறுவர்களுக்கு புற்று நோய்களை குணப்படுத்த முடியும் என்று அவர் தெரிவித்தார். (நி)

# பகிடிவதை தொடர்பில் 15 பேர் அதிரடியாகக் கைது

(கொழும்பு)



கிழக்குப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தில் பயிலும் மாணவிகள் குழுவை பகிடிவதை செய்த 6 மாணவிகள் மற்றும் 9 மாணவர்களை குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

அதே பல்கலைக்கழகத்தில் படிக்கும் 24 முதல் 26 வயதுக்குட்பட்ட மாணவர்களே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளனர்.

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் பயிலும் மாணவிகள் குழுவை இந்த மாணவர்கள் பகிடிவதை செய்ததாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பகிடிவதை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் பிரிவிற்கு கிடைத்த முறைப்பாட்டின் பேரில் நடத்தப்பட்ட விசாரணைகளை தொடர்ந்து, சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 4 விக்கெட்டுகளால் ஜிம்பாப்வேயை வீழ்த்திய இலங்கை



ஹராரேவில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற மூன்று போட்டிகளை கொண்ட ரி-20 கிரிக்கெட் தொடரின் முதல் ஆட்டத்தில் இலங்கை அணி சிம்பாப்வேயை நான்கு விக்கெட்டுகள் வித்தியாசத்தில் தோற்கடித்தது.

இலங்கை அணியின் துடுப்பாட்டத்தில் பத்தும் நிஸங்க ஆதிக்கம் செலுத்தியதுடன், கமிந்து மெண்டீஸ் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

ஒருநாள் தொடரினை ஏற்கனவே 2:0 என்ற கணக்கில் சொந்த மண்ணில் பறிகொடுத்துள்ள ஜிம்பாப்வே வெற்றிக்கு திரும்பும் நோக்குடன் இந்தப் போட்டியில் களம் இறங்கியது.

இலங்கை நேரப்படி நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் ஆரம்பமான இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணியானது துடுப்பெடுத்தாடும் வாய்ப்பினை எதிர் அணிக்கு வழங்கியது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே தொடக்க துடுப்பாட்ட வீரர் பிரையன் பென்னட்டின் 81 ஓட்டங்கள் காரணமாக 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்கு 175 ஓட்டங்களை எடுத்தது.

பென்னட்டுக்கு அடுத்தபடியாக அணித் தலைவரும், ஐசிசி ஆடவர் ஒருநாள் சகல துறை துடுப்பாட்ட வீரர்கள் வரிசையில் முதலிடத்துக்கு வந்துள்ள சிக்கந்தர் ராசா 28 ஓட்டங்களை எடுத்தார்.

பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் துஷ்மந்த சமிர அதிகபட்சமாக மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார்.

பின்னர் இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, ஐந்து பந்துகள் மீதமுள்ள நிலையில் ஆறு விக்கெட்டுகளை இழந்த நிலையில் 177 ஓட்டங்களை எடுத்தது.

இலங்கை அணி சார்பில் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான பத்தும் நிஸங்க 32 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகள் அடங்கலாக 55 ஓட்டங்களை எடுத்தார்.

இது சர்வதேச ரி20 கிரிக்கெட்டில் அவரது 15 ஆவது அரைசதமாகும்.

27 வயதான வலது கை துடுப்பாட்ட வீரர் நிஸங்க, ஒருநாள் சர்வதேச தொடரின் வெற்றியில் அரைசதம் மற்றும் சதத்துடன் முக்கிய பங்கு வகித்தார்.

நிஸங்கவின் ஆட்டமிழப்புடன் இலங்கை அணி, அடுத்த 19 பந்துகளில் நான்கு விக்கெட்டுகளை பறிகொடுத்தன.

அதன்படி, இலங்கை அணி 10 ஓட்டங்களுக்குள் நான்கு விக்கெட்டுகளை இழந்து, 106-4 என்ற நிலையுடன் போராடியது.

இருப்பினும், கமிந்து மெண்டிஸ் 16 பந்துகளில் நான்கு சிக்ஸர்கள் உட்பட ஆட்டமிழக்காமல் 41 ஓட்டங்களை எடுத்து இன்னிங்ஸை நிலைப்படுத்தினார்.

அவருக்கு பக்க பலமாக துஷான் ஹேமந்த 14 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இறுதியாக இலங்கை 19.1 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 177 ஓட்டங்களை எடுத்து தொடரில் முன்னிலை பெற்றது.

சிம்பாப்வே அணி சார்பில் பந்து வீச்சில் ரிச்சர்ட் ங்காரவா நான்கு ஓவர்களில் 19 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.


போட்டியின் ஆட்ட நாயகனாக கமிந்து மெண்டீஸ் தெரிவானர்.

இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ரி-20 போட்டியானது நாளை ஆரம்பமாகவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)




செர்வின் | கரன் | வினுஷா







ஜஸ்மின் | சனோஜா | சருஜா










நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத் திட்டங்களுக்கான நிதி

# அடுத்த ஆண்டு முதல் வழங்கப்படும்

## பிரதி அமைச்சர் தெரிவிப்பு

**(யாழ்ப்பாணம்)**

**கடந்த ஆட்சிக் காலத்தில் சிறு நிதி வழங்கப்பட்டு பின்னர் நிறுத்தப்பட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வீடுகளுக்கான மிகுதி நிதி அடுத்த ஆண்டு முதல் அரசாங்கத்தினால் வழங்கப்படும் என பிரதி அமைச்சர் தெரிவித்தார்.**

யாழ்ப்பாண மாவட்டத்தில் நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்களின் மீளாய்வுக் கூட்டம் கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு பிரதி அமைச்சர் ரி. பி. சரத் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் நேற்றைய தினம் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு பிரதி அமைச்சர் ரி. பி. சரத் யாழ்ப்பாண மாவட்டத்தின் மீள்குடியேற்ற செயற்பாடுகளுக்காக தமது அமைச்சின் ஊடாக யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இவ்வாண்டு 1259 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், மீள்குடியேற்ற செயற்பாடுகளின் முன்னேற்றங்களை தாம் நேரில் ஆராய வந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் கிளிநொச்சியிலுள்ள கிராமங்களுக்குச் சென்ற போது அடிப்படைத் தேவைகள், போக்குவரத்து வசதிகள், அபிவிருத்திகள் வீழ்ச்சி நிலையிலேயே உள்ளது எனவும் தெரிவித்தார்.

மேலும் கடந்த ஆட்சி காலத்தில் தேர்தலுக்காக சிறு நிதி வழங்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டு நிறுத்தப்பட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் 3847 வீடுகளுக்கான மிகுதி நிதி அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு, அடுத்த ஆண்டு முதல் இரண்டு ஆண்டுகளுக்குள் வழங்கப்படும் எனவும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், வீட்டுத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் ரூபா 1 மில்லியன் நிதி போதாமையினால் அதனை ரூபா 1.5 மில்லியனாக அதிகரித்துள்ளதாகவும், கிராமங்கள் ரீதியாக பிரஜா சக்திக் குழுக்கள் அமைக்கப்பட்டு மக்களின் பிரச்சினைகள் ஒன்றிணைந்து தீர்க்கப்படும் எனவும் தெரிவித்தார். (8)

# மஹிந்தவின் விஜேராம இல்லம் சி. ஐ. டி வசமாகும் சாத்தியம்

(கொழும்பு)

கொழும்பு, விஜேராம வீதியில், தற்போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வசித்து வரும் அதிகாரபூர்வ இல்லத்தை குற்றப் புலனாய்வுத் துறையினரிடம் ஒப்படைப்பது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிரேஷ்ட அரசாங்க அதி காரிகள் குழு கலந்து கொண்ட சமீபத்திய கூட்டத்தில் இந்த விவகாரம் விவாதிக்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

2025 ஜூன் 16 ஆம் திகதியன்று அமைச்சரவை ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து, முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட சிறப்புச் சலுகைகளை ரத்து செய்வதற்கான யோசனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அத்துடன் தேவையான சட்டத்தைத் தயாரிப்பதற்கான பணிகள் சட்ட வரைஞருக்கும் பாரப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தநிலையில் குறித்த யோசனை நிறைவேற்றப்பட்டவுடன் விஜேராம மாவத்தையில் உள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்தை விட்டு வெளியேறவுள்ளதாக மஹிந்த ராஜபக்ஷவும் முன்னதாகக் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# செயற்பாடற்ற 33 அரச நிறுவனங்களை மூடுவதற்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

நாட்டில் தற்போது செயல்படாத நிலையில் உள்ள 33 அரச நிறுவனங்களை முறையாக மூடுவதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. அரசின் மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் இந்த நிறுவனங்கள் இரண்டு கட்டங்களாக மூடப்படவுள்ளன.

பொதுச் சேவைகளை வழங்குதல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துதல் போன்ற நோக்கங்களுக்காக இந்த நிறுவனங்கள் ஆரம்பத்தில் உருவாக்கப்பட்டன. ஆனால் அவற்றில் பல தற்போதுள்ள தேசிய தேவைகளுடனோ அல்லது சந்தை கோரிக்கைகளுடனோ ஒத்துப் போகவில்லை. செயற்பாட்டில் உள்ள சிக்கல்கள் மற்றும் மோசமான நிதி நிலைமை காரணமாக, அவை செயலற்ற நிறுவனங்களாக மாறிவிட்டன.

இந்த நிறுவனங்களைத் தொடர்ந்து பராமரிப்பது தேசிய பொருளாதாரத்திற்கோ அல்லது பொதுச் சேவை வழங்கலுக்கோ எந்த வகையிலும் பங்களிக்கவில்லை என்றும், அரசுக்கு தேவையற்ற நிதிச்சுமையை ஏற்படுத்துவதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.


எனவே, நிதி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த இந்த யோசனைக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்த நிறுவனங்களை மூடும் பணி, நிதி அமைச்சகத்தின் கீழ் புதிதாக நிறுவப்பட்ட ஒரு "சிறப்பு மூடல் பிரிவு" மேற்பார்வையில் நடைபெறும்.

நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, இந்த நிறுவனங்களை மூடுவதால் எந்த வொரு வேலை இழப்பும் ஏற்படாது என்று தெளிவுபடுத்தினார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரச நிறுவனங்கள் முழுமையாக செயலற்ற நிலையில் இருப்பதாகவும், சிலவற்றிற்கு பெயர்ப்பலகைகள் மட்டுமே எஞ்சியிருப்பதாகவும் அமைச்சர் ஜயதிஸ்ஸ மேலும் தெரிவித்தார். இந்த முடிவு, சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களுடன் கலந்துரையாடிய பின்னரே எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அதற்கமைய ஆசிய விளையாட்டுப் போட்டிகள் (பிரைவேட்) லிமிடெட், செலென்டிவா இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிடெட், லங்கா லொஜிஸ்டிக்ஸ் அண்ட் டெக்னாலஜிஸ் லிமிடெட், காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் அம்பாந்தோட்டை 2018 (பிரைவேட்) லிமிடெட், மாகம்புர துறைமுக முகாமைத்துவ நிறுவனம் (பிரைவேட்) லிமிடெட்., மிஹின் லங்கா (பிரைவேட்) லிமிடெட், டெக்னோ பார்க் டெவலப்மென்ட் கம்பனி (பிரைவேட்) லிமிடெட்., ஊடகப் பயிற்சி நிறுவனம் மற்றும் லங்கா சிமெண்ட் பிஎல்சி உள்ளிட்டவையே இவ்வாறு மூடப்படவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி)


அந்தியேட்டி அழைப்பிதழ்



தோற்றம் 27 - 05 - 1950

மறைவு 05 - 08 - 2025

கடந்த 05.08.2025 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர். கணபதி இராமச்சந்திரன்

(வெற்றிலைக்கடை ஐயா)


அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வானது 05.09.2025 வெள்ளிக்கிழமை இன்று நண்பகல் 12.00 மணியளவில் "அன்னாரின் இல்லத்தில்" நடைபெற உள்ளது. அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(5307)

21/25 வைரவர் கோவில் வீதி,
அரியாலை.

தகவல்- குடும்பத்தினர்.
077 407 2979, 077 455 2381.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழாவின் தேர்த்திருவிழா நேற்றையதினம் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ பக்திபூர்வமாக இடம்பெற்றது.

# சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய உணவகத்திற்கு சீல்

(மன்னார்)

மன்னார் நகரப்பகுதியில் நீண்ட நாட்களாக சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கி வந்த உணவகம் ஒன்று நேற்று புதன்கிழமை மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனை சுகாதார உத்தியோகத்தர்களால் சுற்றி வளைக்கப்பட்டு சீல் வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் பள்ளிமுனை பிரதான வீதியில் அமைந்திருந்த குறித்த உணவகம் உரிய முறையில் பதிவு செய்யப்படாமல் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல் உணவுகள் தயாரிக்கப்பட்டு பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டது.

இந்நிலையில் மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரியின் ஒத்துழைப்புடன் பொது சுகாதார உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது குறித்த உணவகத்தின் கழிவு நீர் வெளியேற்றப்படாமல் புழுக்கள் உருவாகியும் அதேநேரம் ஆரோக்கியமற்ற விதமாக உணவுகள் தயாரிக்கப்பட்டிருந்தமை, கையுறை தலையுறை பயன்படுத்தாமலும் உணவுப்பொருட்கள் பாதுகாப்பற்ற முறையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டதன் அடிப்படையில் குறித்த உணவகத்திற்கு சீல் வைக்கப்பட்டது.

குறித்த உணவகத்தின் உரிமையாளர் மீது பல்வேறு பிரிவுகளில் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-285)

# பொதுக்கூட்டமும் நிர்வாகச் சபைத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத்தெரிவும் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.30 மணிக்கு யாழ்.மாவட்ட சர்வோதய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளும் மதுரையைச் சேர்ந்த பேராசிரியர் முனைவர் க.பழனித்துரை "காந்தியக் கொள்கை" எனும் தலைப்பில் உரையாற்றவுள்ளார்.

ஆர்வலர்கள் இவ்வுரையை கேட்க விரும்பின் இக்கூட்டத்தில் இணைந்து பயன்பெற முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (8)

# வடக்கில் பெண்நாய்களுக்கு கருத்தடை

(யாழ்ப்பாணம்)

வடக்கில் கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்த பெண் நாய்களுக்கு கருத்தடை செய்யும் திட்டம் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போதே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு, வடக்கு மாகாண சுகாதார அமைச்சு, வடக்கு மாகாண விவசாய அமைச்சு ஆகியன இணைந்து இச் செயற்றிட்டத்தை முன்னெடுப்பது தொடர்பில் ஏற்கனவே ஆராயப்பட்டிருந்த நிலையில் அது தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்களின் செயலர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

அந்தவகையில் பெண் நாய்களுக்கு கருத்தடை செய்யும் இந்தத் திட்டம் மூன்று ஆண்டுகளுக்கு தொடரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் ஆரம்ப செயற்றிட்டம் நெடுந்தீவில் இடம்பெறவுள்ளதுடன் ஒவ்வொரு மாவட்டங்களிலும் நகரங்களில் இதன் ஆரம்ப செயற்றிட்டத்தை முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 250 | 350 | 250-300 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 190 | 170 | 220 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 150 | 100 | 200 |
| தக்காளி | 150 | 160 | 250 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 300 | 200 | 240 |
| கோவா | 320 | 240 | 300 | 200 | 300 |
| கரட் | 380 | 400 | 450 | 330 | 350 |
| பூசணி | 100 | 100 | 60 | 60 | 50 |
| புடோல் | 100 | 120 | 150 | 80 | 160 |
| வாழைக்காய் | 120 | 120 | 150 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 200-350 | 300 | 200 | 250 |
| பெரிய வெங்காயம் | 150 | 190 | 150 | 140 | 150 |
| பாகற்காய் | 400 | 400 | 400 | 280 | 320 |
| வெண்டக்காய் | 150 | 120 | 200 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 350 | 330 | 250 | 250 | 350 |
| பயற்றங்காய் | 300 | 250 | 300 | 230 | 300 |
| லீக்ஸ் | 280 | 250 | 250 | 150 | 200 |
| பீற்றூட் | 100 | 100 | 150 | 100 | 150 |
| கறிமிளகாய் | 400 | 350 | 300 | 230 | 300 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 400 | 320 | 300 |
| போஞ்சி | 600 | 700 | 500 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 250 | 150 | 300 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 100 | 50-100 | 100 | 90 | 100 |
| தேசிக்காய் | 300 | 350 | 500 | 550 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 100-200 | 150-200 |
| இராசவள்ளி | 600 | 600 | 600 | 450 | 800 |
| வெங்காயப்பூ | 400 | 250 | 300 | 250 | 350 |
| முள்ளங்கி | 100 | 150 | 100 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 200 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 60 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | 80 | 200 |

# வெங்காய அறுவடை



(தருமபுரம்)

மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் மூலம் உண்மை விதையிலிருந்து சின்ன வெங்காய உற்பத்தி திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட வெங்காய அறுவடை செல்வாநகர் விவசாய போதனாசிரியர் பிரிவில் நேற்று நடைபெற்றது.

செல்வாநகர் விவசாய போதனாசிரியர் செ.செல்வநாயினின் தலைமையில் நடைபெற்ற அறுவடை விழாவில் கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் வி. சோதிலட்சுமி கலந்து கொண்டு வெங்காய அறுவடையை ஆரம்பித்து வைத்தார்.

குறித்த நிகழ்வில் பாடவிதான உத்தியோகத்தர் மறுவயற்பயிர்ச்செய்கை பாடவிதான உத்தியோகத்தர் க. பிரதீபன், பாடவிதான உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள், விவசாயிகள் என பலர் கலந்து கொண்டனர். (8-316)

# 2 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவுக்கு ஏலம் போன மாம்பழம்

(வவுனியா)

வவுனியா - உக்குளாங்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ திருவிழாவின் போது மாம்பழம் ஒன்று 2 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவுக்கு ஏலத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

உக்குளாங்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் மகோற்சவ உற்சவத்தின் 6 ஆம் நாள் மாம்பழ திருவிழாவான நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்றது.

இதன்போது, விநாயகருக்கு படைக்கப்பட்ட மாம்பழம் ஒன்று கோவில் வளர்ச்சி நிதிக்காக ஏலத்தில் விடப்பட்டுள்ளது.

பலத்த போட்டிக்கு மத்தியில் 2 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவுக்கு குறித்த மாம்பழம் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. (8-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.பி க்களுக்கான 'வியத்புர' சலுகைகள் இரத்து

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களால் "வியத்புர" வீட்டுத்திட்டத்தில் வீடுகளைக் கொள்வனவு செய்யும் போது வழங்கப்பட்டுள்ள சலுகைகளை நீக்குதலுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2022.05.09 அன்று நாட்டில் இடம்பெற்ற குழப்பகரமான சூழ்நிலையால் வீடுகளை இழந்த அப்போதிருந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையால் நிர்மாணிக்கப்பட்ட வியத்புர வீட்டுத்தொகுதியில் 101 வீட்டு அலகுகளை ஒரு வருட வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு 2022.07.04 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பின்னர், குறித்த வீடுகளை சலுகை முறையில் கொள்வனவு செய்வதற்கு வாய்ப்பு வழங்குமாறு அப்பாராளுமன்ற உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள சலுகை முறையை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்வதற்கும், 29 பாராளுமன்ற உறுப்பினர்களும் உடன்பாடு தெரிவிப்பின் சாதாரண மக்களுக்கு குறித்த வீட்டு அலகைக் கொள்வனவு செய்யும் முறை மற்றும் விலைக்கமைய அவர்களுக்கும் வீடுகளைக் கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பை வழங்குவதற்கும் நகர அபிவிருத்தி, கட்டுமானம் மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. (நி)

# நாட்டில் அதிகரிக்கும் பதின்ம வயது கர்ப்பங்கள்

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தகவல்

(கொழும்பு)

கடந்த 2025 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் 44 பதின்ம வயது கர்ப்ப சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

குறித்த காலப்பகுதியில் மொத்தம் 5,461 சிறுவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை பெற்றுள்ளது.

இவற்றில் 4,501 முறைப்பாடுகள் சட்டத்துடன் தொடர்புடையவை எனவும், 960 முறைப்பாடுகள் சட்டத்துடன் தொடர்பற்றவை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த காலப்பகுதியில், சிறுவர்கள் மீதான கடுமையான துஷ்பிரயோகம் தொடர்பாக 141 முறைப்பாடுகள், துன்புறுத்தல் தொடர்பாக 330 முறைப்பாடுகள், மற்றும் வன்கொடுமை தொடர்பாக 32 முறைப்பாடுகள் பெறப்பட்டுள்ளன.

இதில், அதிகபட்சமாக சிறுவர்கள் மீதான சித்திரவதை தொடர்பாக 1,126 முறைப்பாடுகள் பெறப்பட்டுள்ளன.

மேலும், சிறுவர்கள் யாசகம் பெறுவது தொடர்பாக 125 முறைப்பாடுகள் மற்றும் சிறுவர் தொழிலாளர் தொடர்பாக 82 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இதே காலப்பகுதியில், சிறுவர்களுக்கு எதிரான இணைய மிரட்டல் தொடர்பாக 81 முறைப்பாடுகள், தற்கொலை தொடர்பாக 10 முறைப்பாடுகள், போதைப் பொருள் குற்றங்கள் தொடர்பாக 63 முறைப்பாடுகள், குழந்தைத் திருமணம் தொடர்பாக 3 முறைப்பாடுகள், மற்றும் கருக்கலைப்பு தொடர்பாக 1 முறைப்பாடு பெறப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது. (நி)

## அரசாங்க பாடசாலைகளில்

# மாணவர்களை சேர்ப்பதில் கடுமையாகும் கட்டுப்பாடுகள்

(கொழும்பு)

அரசாங்க பாடசாலைகளில் 5 மற்றும் 6 ஆம் வகுப்புகளைத் தவிர்த்து, தரம் 2 முதல் 11 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களை சேர்ப்பதற்கான சுற்றறிக்கைகளை இரத்து செய்து புதிய சுற்றறிக்கைகளை வெளியிட அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

புதிய கல்வி சீர்திருத்தங்களை செயற்படுத்துவதற்கு, ஒரு வகுப்பறையில் மாணவர்களின் எண்ணிக்கையை அங்கீகரிக்கப்பட்ட வரம்புகளுக்குள் பராமரிப்பது அவசியமாகும்.

இதனால் நாட்டில் உள்ள அனைத்து பிள்ளைகளின் கல்வி உரிமையை உறுதி செய்யும் வகையில், பாடசாலைகளில் 5 மற்றும் 6 ஆம் வகுப்புகளைத் தவிர்த்து, இடைநிலை தரங்களுக்கு மாணவர்களை சேர்க்கும் வாய்ப்பை வழங்குவதற்கான முறையான வழிமுறையை அறிமுகப்படுத்துவது பொருத்தமானது என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த விடயங்களை கருத்தில் கொண்டு, பல்வேறு காரணங்களுக்காக அவர்கள் தற்போது படிக்கும் பாடசாலையில் இருந்து வேறொரு பாடசாலையில் உண்மையிலேயே சேர்க்கப்பட வேண்டிய மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

அதற்கு ஏற்ற வகையில், பாடசாலைகளுக்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பை வழங்க புதிய சுற்றறிக்கை வழிமுறைகளை வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது. (நி)


ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் -2025

## தற்காலிக கடை இட ஒதுக்கீடு

ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் 21.09.2025 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தலத்தின் மஹோற்சவ காலத்தில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. கடைகள் தொகுதி வாரியாக பின்வரும் வகையில் அமையும்.

01. ஐஸ்கிறீம்
02. இனிப்பு வகை
03. தேனீர் கடை
04. மணிக்கடை
05. கச்சான் கடை

முக்கிய குறிப்பு

- முதல் மூன்று கடைத்தொகுதிகளுக்குமான இடம் பகிரங்க ஏலத்தில் கூறிய கூறுவிலைக்கு வழங்கப்படும். ஏனைய தொகுதிக்கான அறவீடு அடிக்கணக்கில் அறவிடப்படும்.
- அக்கறையுடைய வர்த்தகர்கள் முன்கூட்டியே இட ஒதுக்கத்தை பெற்று அது தொடர்பான வாடகைப் பணத்தை முழுமையாக செலுத்தி உங்கள் இடங்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
- விபரங்கள் வழங்க வேண்டிய படிவங்கள் கோவில் அலுவலகத்தில் அன்றைய தினம் பெற்றுக் கொள்ளலாம்.
- ஏலம் போடும் நாள் 11.09.2025 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப.10.00 மணி.
- ஆலய நிர்வாகத்தின் முடிவே இறுதி முடிவாகும்.

(C-3806)

துன்னாலை வடக்கு, புலோலி.

தொலைபேசி இல
021 226 3074
021 205 6644

பெறுநர், வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்.



# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை


| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1998- இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>உயரம்: 5'9"<br>கி-பா-05<br>தகைமை/தொழில்: BEng,Engineer<br>எதிர்பார்ப்பு : பட்டதாரி<br>தொ.இ: B/15912 | பிறப்பு-1996 -இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம் : 5'3"<br>தகைமை/தொழில்: Management,Accountant(London)<br>எதிர்பார்ப்பு : PR உள்ளவர்<br>தொ.இ: G/15911 |
| பிறப்பு:1987-இந்து<br>நட்சத்திரம்:அவிட்டம் 6 இல் சூரி செவ்<br>கி-பா-8 1/2<br>உயரம் :5'6"<br>தகைமை/தொழில்-Diploma,Photograper(Norway)<br>எதிர்பார்ப்பு : தகுதியான பெண்<br>தொ.இ: B/15913 | பிறப்பு-1997-இந்து<br>நட்சத்திரம்-ரேவதி 1இல் செவ்<br>கி-பா- 59<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSc.Demo<br>எதிர்பார்ப்பு: உயர் பதவிகள்<br>தொ.இ: G/15914 |
| பிறப்பு:1991- இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 5இல் சூரி செவ்<br>கி-பா-12 1/2<br>உயரம் :5'5"<br>தகைமை/தொழில்: Diploma,Technical Manager(pvt)<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: B/15916 | பிறப்பு-1997-RC<br>நட்சத்திரம்- சித்திரை<br>உயரம் : 5'3"<br>தகைமை/தொழில்:MBBS,Doctor<br>எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்<br>தொ.இ: G/15915 |
| பிறப்பு: 1986- இந்து<br>நட்சத்திரம்: பூரம் 7இல் செவ்<br>கி-பா-46<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்-BA,DO<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்,விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: B/15917 | பிறப்பு-1988-இந்து<br>நட்சத்திரம்-புனர்பூசம்<br>கி-பா- 28<br>உயரம் : 5'2"<br>தகைமை/தொழில்: BCom,DO<br>எதிர்பார்ப்பு -அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/15919 |
| பிறப்பு: 1990- இந்து<br>நட்சத்திரம்- உத்தரட்டாதி<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: A/L,Building Contractor<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15918 | பிறப்பு-1988-இந்து<br>நட்சத்திரம்:பூசம்<br>கி.பா:23 1/4<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில்:BA,PGDE,Teacher<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/11592 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## 21 தொன் நிவாரணப் பொருட்களை ஆப்கானுக்கு அனுப்பியது இந்தியா



(காபூல்)

ஆப்கானிஸ்தானுக்கு 21 தொன் நிவாரணப் பொருட்களை இந்தியா அனுப்பி வைத்துள்ளது.

ஆப்கானிஸ்தானின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள மாகாணம் குனார் பாகிஸ்தான் எல்லையில் உள்ள இந்த மாகாணத்தில் தொடர்ந்து பல நிலநடுக்கங்கள் ஏற்பட்டன.

அவற்றில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவு கோலில் 6 புள்ளிகளாக பதிவானது. இது நங்கர்ஹார் மாகாணம் நுலா லாபாத்தை மையமாக கொண்டு உருவானது.

அண்டை நாடுகளான பாகிஸ்தான், இந்தியாவிலும் இதன் தாக்கம் உணரப்பட்டது.

இதற்கிடையே மலை பிரதேசமான குனார் மாகாணத்தின் பல கிராமங்களில் உள்ள வீடுகள் மண்ணால் கட்டப்பட்டு இருந்தன.

நிலநடுக்கம் ஏற்பட்ட போது 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து தரைமட்டமாகின.

நள்ளிரவு நேரம் என்பதால் வீடுகளில் தூங்கிக் கொண்டிருந்த மக்கள் உயிருடன் புதையுண்டனர்.

இதுவரை கிடைத்த தகவலின்படி நிலநடுக்கத்தால் பலியானோர் எண்ணிக்கை 1400 ஐ கடந்தது.

3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்து இருப்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட ஆப்கானிஸ்தானுக்கு நிவாரண உதவிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

காபூலுக்கு வான்வழியாக நிவாரண பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டு இருக்கின்றன.

மருந்துப் பொருட்கள், போர்வைகள், சக்கர நாற்காலிகள், சானிடைசர்கள், ஜெனரேட்டர்கள், சமையலறை பாத்திரங்கள், என விமானம் மூலம் 21 தொன் நிவாரண பொருட்கள் கொண்டு செல்லப்பட்டது என இந்திய மத்திய வெளியுறவு மந்திரி ஜெய்சங்கர் தனது எக்ஸ்தள பக்கத்தில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இந்தியா அனுப்பி வைத்த நிவாரணப் பொருட்கள் ஆப்கானிஸ்தான் சென்றடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சாத்தியமான அனைத்து மனிதாபிமான உதவிகளையும் வழங்க இந்தியா தயாராக உள்ளது என்று இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. (நி)



# ஒப்பந்தத்திற்கு உடன் தொடர்ந்து போரி

(மொஸ்கோ)

**உக்ரைன் ஒப்பந்தத்திற்கு உடன்படவில்லையென்றால், ரஷ்யா தமது அனைத்து நோக்கங்களையும் அடையும் வகையில் போராடத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி விளாடிமிர் புடின் எச்சரித்துள்ளார்.**

இது அமெரிக்காவின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கும் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்தும் உலக ஒழுங்கிற்கும் சவாலாகக் கருதப்படும்.

சீனாவில் நடைபெற்ற பாரிய இராணுவ அணிவகுப்பில் கலந்து கொண்டதன் பின்னர் அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இந்தநிலையில், உக்ரைனின் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியை சந்திப்பதற்கான சாத்தியத்தை தாம் ஒருபோதும் நிராகரிக்கவில்லை.

எனினும், அதில் ஏதேனும் அர்த்தமுள்ளதா என்பதைப் பார்க்க வேண்டும் என்று ரஷ்ய ஜனாதிபதி புடின் குறிப்பிட்டுள்ளார்.

ஜெலன்ஸ்கி எப்போதும் மொஸ்கோவிற்கு வந்து தம்மை சந்திக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உக்ரைனின் போர் தொடர்பில் ரஷ்ய ஜனாதிபதி புடினிடம் இருந்து இதுவரை தமக்கு எந்தச் செய்தியும் வரவில்லை என்று



அமெரி
ட்ரம்ப்
அத்
ஜனாதி

## பாலஸ்தீனத்தை அங்கீகரிக்க பெல்ஜியம் முடிவு

(பெல்ஜியம்)

பெல்ஜியம் அரசு பாலஸ்தீன அரசை அங்கீகரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசா மீதான இஸ்ரேல் போரில், தற்போது வரை 60,000இற்கும் அதிகமான பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலின் தாக்குதல்களை, இனப்படுகொலை எனக் குறிப்பிட்டு ஏராளமான நாடுகளின் அரசுகள் கண்டனங்களைத் தெரிவித்துள்ளன.

ஏற்கெனவே, 140இற்கும் அதிகமான சர்வதேச நாடுகள் பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரித்துள்ள நிலையில், அப்பட்டியலில் தற்போது பெல்ஜியமும் இணைவதாக, அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் மாக்ஸிமே ப்ரேவோட் அறிவித்துள்ளார்.

பாலஸ்தீன அரசை அங்கீகரிப்பது குறித்த பெல்ஜியமின் திட்டங்கள், வரும் செப்.9ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் அறிவிக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

இருப்பினும், காசாவில் உள்ள அனைத்து இஸ்ரேலிய பிணைக் கைதிகள் விடுவிக்கப்பட்டு, பாலஸ்தீன கடலோரப் பகுதிகளில் அரசியல் அதிகாரத்தில் இருந்து ஹமாஸ் கிளர்ச்சிப்படை நீக்கப்பட வேண்டுமெனவும் இரண்டு நிபந்தனைகளை பெல்ஜியம் அரசு முன்வைத்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, இஸ்ரேல் அரசால் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்கு கரையில் உள்ள இஸ்ரேலிய குடியிருப்புகளில் இருந்து வரும் பொருட்களைத் தடை செய்யவும், ஹமாஸ் தலைவர்கள், வன்முறைக் குடியேறிகள் மற்றும் 2 தீவிர வலதுசாரி இஸ்ரேலிய அமைச்சர்கள் ஆகியோர் மீதும் தடைகளை விதிக்கவும் பெல்ஜியம் அரசு முடிவு செய்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. இதில், தீவிர வலதுசாரி ஆதரவாளர்களான இஸ்ரேலின் பாதுகாப்புத் துறை அமைச்சர் இட்டாமர் பென் குவிர் மற்றும் நிதியமைச்சர் பெசாலெல் ஸ்மோட்ரிச் ஆகியோர் மீது தடைவிதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

காசாவில் உள்ள பாலஸ்தீனர்கள் மீதான இஸ்ரேலின் தாக்குதல்களும், ஆக்கிரமிப்பும் உடனடியாக முடிவுக்கு கொண்டுவரப்பட்டு, நிரந்தர போர்நிறுத்தம் அறிவிக்கப்படவில்லை என்றால், பாலஸ்தீனம் தனிநாடாக அங்கீகரிக்கப்படும் என பிரான்ஸ், பிரிட்டன் உள்ளிட்ட ஏராளமான நாடுகள் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

கி
இ



(டில்
மஹ
அமைச்
பாலம் கி
இடம்பி
தகவல்
மஹ
இந்திய
செலவி
தூரத்தி
அமைச்
ஆசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...டடன்படாவிடில் ...ாரிட தயார்!

...டடன்
...மது
...டை
...ராக
...மிர்



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அவர் உக்ரைன் ஜனாதிபதியுடன் தொலைபேசி கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபடவுள்ளதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது. (நி)

## போர்த்துக்கல் - லிஸ்பனில் ரயில் கேபிள் கார் விபத்து

### 15 பேர் உயிரிழப்பு



(லிஸ்பன்)

போர்த்துக்கல்லின் தலைநகரான லிஸ்பனில் உள்ள 140 ஆண்டுகள் பழமையான குளோரியா ஃபுனிகுலர் எனும் ரயில் கேபிள் கார் தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் 15 பேர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விபத்தில் பாதிக்கப்பட்ட மேலும் 18 பேர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர்களில் ஐந்து பேர் ஆபத்தான நிலையில் உள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

விபத்தில் உயிரிழந்தவர்களில் வெளிநாட்டவரும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது. இருப்பினும் அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை என அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி)

## படகு மூழ்கியதில் 60 பேர் உயிரிழப்பு

### நைஜீரியாவில் சோகம்

(நைஜர்)

வடக்கு மத்திய நைஜீரியாவில் 80 பேரை ஏற்றிச் சென்ற படகு மூழ்கியதில் 60 பேர் உயிரிழந்தனர்.

நைஜீரியாவில், குறிப்பாக மழைக்காலங்களில் படகு விபத்துக்கள் அடிக்கடி நிகழ்கின்றன.

ஆனாலும் அந்த நாட்டு மக்களுக்கு படகு போக்குவரத்து தான் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. நைஜீரியாவின் வட - மத்திய நைஜர் மாநிலத்தில் பயணிகள் 80 பேரை ஏற்றிச் சென்ற படகு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 60 பேர் உயிரிழந்துள்ளதுடன் 15இற்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டனர் என உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர். மலாலே மாவட்டத்தில் உள்ள துங்கன் சுலேவிலிருந்து துக்காவுக்கு துக்க நிகழ்ச்சிக்கு சென்றபோது விபத்து நிகழ்ந்துள்ளது.

இந்த விபத்தில் பத்து பேர் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டுள்ளனர். மேலும் பலர் இன்னும் தேடப்பட்டு வருகின்றனர்.

படகு அதிக சுமையுடன் இருந்ததால், மரத்தின் அடிப் பகுதியில் மோதியதால் படகு கவிழ்ந்ததின் விபத்திற்கான காரணம் என்பது விசாரணையில் தெரிய வந்தது. (நி)



## கின்னஸில் இடம்பிடித்த இந்தியாவின் ஈரடுக்கு மேம்பாலம்



(டில்லி)

மஹாராஷ்டிராவின் நாக்பூரில் அமைக்கப்பட்டுள்ள ஈரடுக்கு மேம்பாலம் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளதாக அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மஹாராஷ்டிராவின் நாக்பூரில் இந்திய மதிப்பில் ரூபாய் 573 கோடி செலவில் சுமார் 5.6 கிலோமீற்றர் தூரத்திற்கு இந்த மேம்பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

ஆசியாவின் மிக நீளமான ஈரடுக்கு மேம்பாலம் என்ற பெருமையைப் பெற்றுள்ள நாக்பூர் மேம்பாலம், இந்தியாவின் உட்கட்டமைப்புக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இந்த நிலையில், மிக நீளமான ஈரடுக்கு மேம்பாலம், கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது. (நி)

## Chat GPTயில் பல மாற்றங்களை கொண்டு வந்த Open AI

(வோஷிங்டன்)

உலகப் புகழ்பெற்ற செயற்கை நுண்ணறிவு நிறுவனமான Open AI, சிறுவர்களின் நலன்கருதி பல புதிய கட்டுப்பாடுகளையும், அம்சங்களையும், தனது செயலியான Chat GPTயில் அறிமுகப்படுத்தியுள்ளது.

சமீபத்தில் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் 16 வயது சிறுவன் ஒருவன் Chat GPTயுடன் நீண்ட உரையாடல்களில் ஈடுபட்டதைத் தொடர்ந்து தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதையடுத்து, பெற்றோர் Open AI மீது வழக்குத் தொடர்ந்தனர்.

இச்சம்பவத்தை அடுத்து, இளம் வயதினரின் மனநலத்தில் சாட்பாட்களின் தாக்கம் குறித்த உலகளாவிய கவலை அதிகரித்துள்ள நிலையில், Chat GPTக்கு புதிய பாதுகாப்பு அம்சங்கள் அறிமுகப் படுத்தப்படுகின்றன.

பெற்றோர் தங்கள் கணக்குகளை குழந்தைகளின் Chat GPT கணக்குகளுடன் இணைத்து உரையாடல்களை கண்காணிக்க முடியும்.

குழந்தை மனஅழுத்தத்தில் இருக்கலாம் எனக் கருதப்படும் அறிகுறிகள் தென்பட்டால் பெற்றோருக்கு எச்சரிக்கை அனுப்பப்படும்.

நினைவகம், உரையாடல் வரலாறு போன்ற அம்சங்களை பெற்றோர் முடக்கிக் கொள்ளும் வசதியும் வழங்கப்படும். இந்த மாற்றங்கள் அடுத்த ஒரு மாதத்துக்குள் நடைமுறைப் படுத்தப்படும் என Open AI தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)


OpenAI

ChatGPT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்ரெம்பர் மாத இராசி பலன்கள்

## சுப பலன்கள் ஏற்படும்!



**தனுசு: கிரகநிலை** - தைரிய வீரிய ஸ்தானத்தில் சனி, இராகு - களத்திர ஸ்தானத்தில் குரு - அஷ்டம ஸ்தானத்தில் சுக்கிரன் - பாக்கிய ஸ்தானத்தில் சூரியன், புதன், கேது - தொழில் ஸ்தானத்தில் செவ்வாய் - அயன சயன போக ஸ்தானத்தில் சந்திரன் என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 11.09.2025 அன்று பாக்கிய ஸ்தானத்தில் இருந்து புதன் தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14.09.2025 அன்று தொழில் ஸ்தானத்தில் இருந்து செவ்வாய் இலாப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 15.09.2025 அன்று அஷ்டம ஸ்தானத்தில் இருந்து சுக்கிரன் பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

16.09.2025 அன்று பாக்கிய ஸ்தானத்தில் இருந்து சூரியன் தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார். 29.09.2025 அன்று தொழில் ஸ்தானத்தில் இருந்து புதன் லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** எந்த நேரத்திலும் தகுதி குறையாமல் செயற்படும் தனுசு இராசியினரே! நீங்கள் உயர்ந்த எண்ணங்களை உடையவர்கள்.

இந்த மாதம் பேச்சின் இனிமையால் காரியம் கைகூடும். சுப பலன்கள் ஏற்படும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். ஆனாலும் எதிலும் கூடுதல் கவனத்துடன் செயற்படுவது நல்லது.

தொழில் வியாபாரம் திருப்தியாக நடக்கும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக வேலையாக அலைய வேண்டி இருக்கும். புதிய பொறுப்புகள் சிலருக்கு கிடைக்கலாம். வெளிநாடு முயற்சிப் பவர்களுக்கு அனுகூலம் கிடைக் கும்.

குடும்பத்தில் சகஜ நிலை காணப்படும். உறவினர்கள் மூலம் நல்ல தகவல் வந்து சேரும். கணவன் மனைவிக்கிடையே இருந்த இடைவெளி குறையும்.

குடும்பத்தினருடன் ஆன்மிக பயணம் செல்லும் நிலை உருவாகும். மற்றவர்கள் ஆலோசனை கேட்டு உங்களை நாடி வருவார்கள். உங்கள் குடும்பத்தை விட்டு பிரிந்து சென்றவர்கள் மீண்டும் வந்து சேருவார்கள்.

பெண்களுக்கு எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். கூடுதல் கவனத்துடன் செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும்.

அரசியல்வாதிகள் கட்சித் தலை மையின் ஆணையை மீறி தனி கவனம் கொடுக்க வேண்டாம். தொகுதி மக்களிடம் நெருங்கி பழகுவது




அவசியம். கலைத்துறையினருக்கு வெளிநாட்டு புது நிறுவனங்கள் உங்களுக்கு வாய்ப்பளிக்கும். அயராத உழைப்பால் சில நுணுக்கங்களை கற்றுக்கொள்வீர்கள். மாணவர்களுக்கு மற்றவர்களை அனுசரித்து செல்வது நல்லது. கல்வியில் திருப்தி உண்டாகும்.

**மூலம்:** இந்த மாதம் மனதில் தன்னம்பிக்கை கூடும். துணிச்சலாக எதிலும் ஈடுபடுவீர்கள்.

சந்திரன் சஞ்சாரம் உங்களது எண் ணப்படியே எதையும் செய்து முடிக்கும் சூழ்நிலை ஏற்படும். மற்றவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் நாட்டம் செல்லும். கௌரவம் அந்தஸ்து உயரும். வீண் செலவுகள் உண்டாகும்.

**பூராடம்:** இந்த மாதம் தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் தங்களது தொழில் விரிவாக்கம் செய்யும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். அதற்கு தேவையான பண உதவியும் கிடைக்க பெறுவீர்கள். ஆனால் போட்டிகள் பற்றிய கவலைகள் தோன்றும். சமாளிக்க முயல்வீர்கள்.

**உத்திராடம் 1ஆம் பாதம்:** இந்த மாதம் உத்தியோகத்தில் இருப் பவர்கள் தங்களது திறமையால் அலுவ லக பணியை சிறப்பாக செய்வார்கள். புதிய தொடர்புகள் மகிழ்ச்சியை தருவதாக இருக்கும். குடும்பத்தில் சுப காரியம் நடைபெறும்.

மனைவி குழந்தைகளுடன் சந்தோஷமாக பொழுதை கழிப்பீர்கள். ஆன்மிக பணிகளில் நாட்டம் அதிக ரிக்கும். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும்.

**பரிகாரம்:** குருவிற்கு சாமந்தி மலரை சமர்பித்து வியாழக்கிழமையில் வணங்கிவர எல்லா நன்மைகளும் உண்டாகும்.

**அதிர்ஷ்ட கிழமைகள்:** ஞாயிறு - வியாழன் - வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்:** 17, 18

**அதிர்ஷ்ட தினங்கள்:** 11, 12

## பணவரத்து அதிகரிக்கும்!



**மகரம்: கிரகநிலை** - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சனி, இராகு - ரண ருண ரோக ஸ்தா னத்தில் குரு - களத்திர ஸ்தானத்தில் சுக்கிரன் - அஷ்டம ஸ்தானத்தில் சூரியன், புதன், கேது - பாக்கிய ஸ்தானத்தில் செவ்வாய் - லாப ஸ்தா னத்தில் சந்திரன் என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 11.09.2025 அன்று அஷ்டம ஸ்தானத்தில் இருந்து புதன் பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14.09.2025 அன்று பாக்கிய ஸ்தானத்தில் இருந்து செவ்வாய் தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

15.09.2025 அன்று களத்திர ஸ்தானத்தில் இருந்து சுக்கிரன் அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 16.09.2025 அன்று அஷ்டம ஸ்தானத்தில் இருந்து சூரியன் பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 29.09.2025 அன்று பாக்கிய ஸ்தானத்தில் இருந்து புதன் தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** எத்தனை தடை வந்தாலும் எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் பின் வாங்காத மகர இராசியினரே! இந்த மாதம் நன்மை வரும். எல்லா வகையிலும் நல்லதே நடக்கும். அனுகூலமான பலன் உண்டாகும். பணவரத்து அதிகரிக்கும்.

எதிர்ப்புகள் விலகும். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். விரும்பிய காரியங்களை செய்து சாதகமான பலன் கிடைக்க பெறுவீர்கள். புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். வியாபார போட்டிகள் குறையும். பழைய பாக்கிகள் வசூலாகும். தொழில் விரிவாக்கத்திற்கு தேவையான பண உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேல் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்க பெறுவார்கள். பணி நிமித்தமாக வெளிநாடு செல்ல வேண்டி வரும்.

குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். கணவன், மனைவிக்கிடையே அன்பு அதிகரிக்கும். பிள்ளைகள் உங்கள் சொற்படி நடப்பது மனதுக்கு திருப்தி தரும். உறவினர்கள் - நண்பர்கள் மூலம் நன்மை நடக்கும். பெண்களுக்கு பணவரத்து எதிர்பார்த்த படி இருக்கும். எடுத்த காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். அரசியல்வாதிகள் எதிர்ப்புகளையும் மீறி முன்னேறுவர். சகாக்கள் மத்தியில் ஆதரவு பெருகும்.

வீண், வறட்டு கௌரவத்துக்காக சேமிப்புகளை கரைத்துக்கொள்ள வேண்டாம். கலைத்துறையினரின் படைப்புத் திறன் வளரும். பொது நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கும் அளவுக்குப் பிரபலமாவார்கள். நல்ல




வாய்ப்புகள் வரும். உங்கள் முன் னேற்றத்திற்கு பாதை வகுக்கும் காலமாக இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் எதிர்பார்த்த உயர்வு கிடைக் கும். உற்சாகமாக காணப்படுவீர்கள்.

**உத்திராடம் 2, 3, 4 பாதங்கள்:** இந்த மாதம் நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். வாகன இலாபம் ஏற்படும். தந்தையுடன் வீண் வாக்கு வாதங்களை தவிர்ப்பது நல்லது. வெளியூர்த் தொடர்புகளில் எச்சரிக்கை தேவை. எண்ணப்படி காரியங்களை செய்து முடிக்கும் சூழ்நிலை ஏற்படும். செலவுகளை குறைக்க திட்டமிடுவது நல்லது. கௌரவம் உயரும்.

**திருவோணம்:** இந்த மாதம் எடுத்துக்கொண்ட காரியங்களில் ஏற்படும் சந்தேகங்களை அவ்வப்போது போக்கிக் கொள்வது நல்லது. திட்டமிட்டு செயலாற்றுவது முன்னேற்றத்திற்கு உதவும். சிக்கலான பிரச்சி னைகளையும் எளிதாக தீர்ப்பீர்கள். பணவரத்து இருக்கும். திறமையான செயல்களால் புகழும், அந்தஸ்தும் உயரும்.

**அவிட்டம் 1, 2 பாதங்கள்:** இந்த மாதம் பேச்சின் இனிமை சாது ரியம் இவற்றால் எடுத்த காரியங்கள் எல்லாம் கைகூடும் பயணங்கள் ஏற்பட லாம். ஆன்மிக பணிகளில் நாட்டம் செல்லும். உங்களது பொருட்களை கவனமாக பாதுகாத்துக் கொள்வது நல்லது. வாகனங்களில் செல்லும் போதும், ஆயுதம், நெருப்பு இவற்றை கையாளும் போதும் கவனம் தேவை.

**பரிகாரம்:** சனி பகவானுக்கு எள் தீபம் ஏற்றி வணங்கிவர கஷ்டங்கள் நீங்கும். ஆரோக்கியம் உண்டாகும்.

**அதிர்ஷ்ட கிழமைகள்:** ஞாயிறு - செவ்வாய் - வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்:** 19, 20, 21

**அதிர்ஷ்ட தினங்கள்:** 13, 14

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆயிரம் குடும்பங்களுக்கு இதுவரை இழப்பீடு வழங்கப்படவில்லை

## கிளி.மாவட்ட பணிப்பாளர்

(கண்டாவளை)

அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட இழப்பீட்டு அலுவலகத்தினால் கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேறிய 43 ஆயிரம் குடும்பங்களுக்கும் முழுமையான இழப்பீடு வழங்க வேண்டும் என ஐக்கிய மனித உரிமைகள் பேரவையினுடைய கிளிநொச்சி மாவட்ட பணிப்பாளர் B.ஜோன்பற்றிக் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த கால யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த 43 ஆயிரம் குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளன. இந்த நிலையில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட இழப்பீட்டு அலுவலகத்தினால் இந்த 43 ஆயிரம் குடும்பங்களில் பன்னிரெண்டாயிரம் குடும்பங்களுக்கு மாத்திரமே இழப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளன. ஏனைய 31 ஆயிரம் குடும்பங்களுக்கும் இதுவரை இழப்பீட்டு கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. எனவே இழப்பீட்டு அலுவலகத்தினால் மீள்குடியேறிய மக்கள் அனைவருக்கும் வழங்க வேண்டிய இழப்பீட்டுத் தொகையை வழங்க வேண்டும் என தெரிவித்தார். (8)

# வண்ணப் பறவை

வானத்தில் சிறகடித்துப் பறக்கும் வண்ணப் பறவைகள் எத்தனை! சின்னச் சிட்டுக் குருவிகள், காக்கைகளின் கூட்டம் குயில்களின் இனிய குரல் இசை, பருந்துகளின் பாரிய சிறகடிப்பு எங்கே போகின்றது இந்த ஊர்வலம்.

இயற்கையின் இனிய வான் பரப்பில் நாலும் நடைபெறும்; பறவைகளின் ஊர்வலம் காண்பதற்கு எல்லோருக்கும் வாய்ப்பில்லை. ஏனெனில் எல்லோரும் ஓட்டமான வாழ்க்கையோடு ஓடிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் இந்த வண்ணப் பறவைகளின் செயற்பாட்டையும் ஒரு முறை நோக்கினால் நல்லது.

சிட்டுக்குருவி உரு வத்தில் சிறியது. ஆனால் உழைப்பில் பெரியது. அது தன் உணவுத் தேட்டத்திற்காக ஓயாமல் உழைக்கின்றது. ஒன்றாகக் கூடி உணவைத் தேடுகின்றது. காடுமேடெல்லாம் பறந்து திரிகிறது. வயல் வெளி யிலே நெல்லைக் கொத்தி செல்கிறது. காக்கையும் அத் தகையதே கூடு கட்டிக் குடும்பமாக வாழ்கின்றது. எங்காவது உணவைக் கண்டால் தன் இனத்தைக் குரல் கொடுத்து அழைக்கின்றது.

எல்லாமாகச் சேர்ந்து உண்ணுகின்றன. கூடுகட்டி அதிலே முட்டையிட்டு குஞ்சு பொரிக்கின்றது. காகம் நீராடாமல் உணவு உண்ணாது. தன் இனத்திலே யாராவது இறந்துவிட்டால் எல்லோரையும் கூவி அழைத்துத் துக்கம் கொண்டாடும் பண்புடையது.

சுற்றம் தழுவி வாழும் பண்பு நலனுடையது.

காகத்தின் கூட்டிலே குயில் முட்டையிடும். காகம் அதனையும் அடைகாக்கும் ஆனால் குஞ்சு பொரித்தபின் குயிலின் குஞ்சு குரல் கொடுக்க வேறு பாடுணர்ந்து அதை விரட்டிக் கலைத்து விடும். குயிலின் குரல் மிக இனிமையானது இள வேனில் காலத்தின் வரவைத் தன் இனிய குரலால் அறிவிக்கும். இனிய குரல் கொண்ட மனிதரை குயிலுக்கு ஒப்பிடுவர்.

வண்ணப் பறவைகளில் கிளி தனித்துவமான பச்சை நிறம் கொண்டது அதனால் " பச்சைக்கிளி" எனச் சிறப்புப் பெயரைப் பெற்றுள்ளது. கீ! கீ! என்னும் அதனுடைய ஒலி புதுமையானது கூட்டமாக இரை தேடிச் செல்லும். பழங்கள் உள்ள மரங்களிலே உணவைத் தேடிச் செல்லும். பஞ்ச வர்ணம் கொண்ட கிளிகளும் உண்டு.

"பஞ்ச வர்ணக்கிளி" என்ற சிறப்புப் பெயர் கொண்டும் அழைக்கப்படுகின்றது. அழகிய வண்ணங்களோடு கழுத்திலே சிவந்த ஆரமும். சிவந்த சொண்டும் உடையது. மனிதர்களின் பேச்சைப் பழக்கினால் பேசும் வல்லமையுடையது.

தினை புனங்களிலும் விளை வயல்களிலும் கூட்டமாக வந்து கதிர்களை அறுத்துச் செல்லும் கிளியை விரட்ட பகல் வேளையிலே இளம் பெண்கள் அவ்விடங்களுக்கு அனுப்பப்படுவார்கள். அவர்கள் கவண் வீசியும் உரத்த குரலில் பாடியும் சிறு தட்டையிலே ஒலி செய்தும் அவற்றை விரட்டுவர். கிளியைக் கூட்டிலே அடைத்து வைத்து கூண்டுக்கிளியாகவும் மனிதர் வளர்ப்பர்.

பருந்து ஒரு பெரிய பறவை. உயரமாகப் பறக்கும் ஆற்றல் உடையது. "உயரப் பறந்தாலும் ஊர்க் குருவி பருந்தாகுமா" என்ற முதுமொழியும் உண்டு. உயரப் பறக்கும் பருந்து கீழே மேயும் கோழியின் குஞ்சுகளைத் தூக்கிச் செல்லும் இயல்புடையது. அது அதன் உணவுத் தேட்டம்.

பறவைகள் மனிதனுக்கு பயிர்ச் செய்கைக்கும் பயிற்சி அளித்துள்ளன. பறவை உண்ட கனிகளில் விதைகள் நிலத்தில் விழுந்து முளைத்து மரமாகின. இதனால் தொலைவான இடங்களில் உள்ள விதைகளையும் கொண்டு வந்து மனிதனுக்கு பயிர்ச் செய்கைக்கு இன்றி அமையாத விதைகளை இனங்காட்டின.

இன்னும் பண்டைக்காலத்தில் மனிதன் உண்ணக் கூடிய பழ வகைகளையும் இனம் காட்டின. அதைக் கொத்தித் தின்ற பழங்களின் எச்சத்தை மனிதன் சுவைத்து அப் பழமரங்களை நாட்டி பயன் பெறலானான்.

கனிவகைகளின் விளைவு காலம் பறவைகளுக்கு மகிழ்வான காலமாக இருந்தது.

செண்பகம் சிறப்பான வண்ணம் கொண்டது. மயிர் கொட்டி என்னும் புழுவை உண்ணும். வேறு சில பறவைகளும் பூச்சி புழுக்களை உண்ணும் இயல்புடையது.

கொக்கு, நாரை எனும் இரு பறவை இனமும் மீன்களை உண்ணும் இயல்புடையது. இப் பறவைகளின் நிறம் வெண்மையானது. " பாலின் வெளிது கொக்கு" என்பர்.

பறவைகளின் பறக்கும் ஆற்றலைக் கண்டே மனிதன் விண்ணூர்திகளை ஆக்கினான். அதனால் அவற்றின் உருவமைப்பும் பறவை போலவே அமைந்தன. எனினும் பறவைகளின் தொடர்பும் தோழமையும் மனித வாழ்வில் இன்றியமையாதவை. அதனை நினைத்தே "காக்கைக் குருவி எங்கள் சாதி" என்று பாரதி பாடிப் பதிவு செய்துள்ளார்.

**வெள்ளி நற்சிந்தனை 03**



முனைவர் ச.மனோன்மணி

# இராசிபலன்

05.09.2025
ஆவணி 20, வெள்ளிக்கிழமை
திரயோதசி பின்னிரவு 2.31 மணிவரை

திருவோணம் முன்னிரவு 11.45 மணிவரை
சுபநேரம் 6.05-7.35 மணிவரை
இராகுகாலம் 10.35 - 12.05 மணிவரை
ஆவணி ஓணம், பிரதோச விரதம்

சந்திராஷ்டமம்
திருவாதிரை, புனர்பூசம்.

வளவன்




இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.




வழிபாடு சிறப்பினைத் தரும், வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், உடல் நலன் சீராகும்.




வழிபாட்டில் ஆர்வம் கூடும், எடுத்த காரியத்தை எளிதில் முடிக்க உறவினர்கள் ஒத்துழைப்பு கிடைக்கும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.




வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், சயனசுகக் குறைவுண்டு.




உடல்ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வழிபாட்டால் நிம்மதி காண வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், வேலைச்சுமை கூடும்.




பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.




செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு, ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.




பணவரவால் சந்தோசமடைவீர்கள், குடும்ப வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.




பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நட்பு வட்டம் விரிவடையும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.




பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், பேச்சில் கனிவு பிறக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சுப செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.




மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, காரிய வெற்றிக்கு கணபதியை வழிபட வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை தேவை, போசன சுகமுண்டு.




பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு, ஆரோக்கியமான நாள்.

அதிகாலை எழுகின்ற பறவைதான் நெடுந்தூரம் செல்லும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 859





வழியில் புயலும் மழையுமாயிருந்த போது பல்லக்கை எங்கேயோ இறக்கியிருக்கிறார்கள். அச்சமயம் இவள் அத்தையைப் பல்லக்கிலிருந்து இறக்கிவிட்டு இவள் ஏறிக் கொண்டிருக்கிறாள். வைத்தியர் மகன் பேரில் மரம் விழுந்து பிரக்ஞை இழந்துவிட்டபடியால் அவனால் கவனிக்க முடியவில்லை. சிவிகை தூக்கிய மற்றவர்கள் கவனிக்கவில்லை. கோட்டை வாசலுக்குச் சமீபத்திலேதான் இது நடந்திருக்க வேண்டும் திருமலை! என்னுடைய ஊகம் சரியாயிருக்கும் என்று உனக்குத் தோன்றுகிறதா?" என்று கேட்டார்.

"சுவாமி! தாங்கள் இப்போது ஊகித்துச் சொன்னபடியே தான் நடந்தது நானே கண்ணால் பார்த்தேன்."

"நீ பார்த்தாயா? அது ஏன்? இத்தனை நேரம் ஏன் வாயை மூடிக் கொண்டிருந்தாய்? சீக்கிரம் சொல்லு!"

"நேற்று முன்னிரவில் மழைக்கால இருட்டில் கோட்டை வாசலை நெருங்கி வந்து கொண்டிருந்தேன். பெரும் புயலும் மழையும் அடித்தன. மரங்கள் முறிந்து விழுந்தன. சாலையோரத்து யாத்திரிகர் மண்டபம் ஒன்றில் சிறிது நேரம் தங்கியிருக்கலாம் என்று சென்றேன். அங்கே நான் ஒதுங்கிய சிறிது நேரத்துக்கெல்லாம் இந்தப் பெண்ணும் இன்னொரு வாலிபனும் வந்தார்கள். இவள் தன் அத்தை மகன் என்று சொன்னாளே, அவனாக இருக்கலாம். மின்னல் வெளிச்சத்தில் அவன் கழுத்தில் உருத்திராட்சம் கட்டியிருப்பதைப் பார்த்தேன். பிஞ்சிலே பழுத்த சைவன் என்று தெரிந்து கொண்டு அவனிடம் 'வைஷ்ணவத்தின் பெருமையைச் சொல்லலாம் சற்றுப் பொழுது போகும்' என்று எண்ணினேன். இதற்குள் அதே மண்டபத்தின் முகப்பில் ஒரு சிவிகையைக் கொண்டு வந்து வைத்தார்கள். சிவிகையின் திரையில் பழுவேட்டரையரின் பனைச் சின்னம் தெரிந்தது. சிவிகையிலிருந்து ஒரு பெண் இறங்கி இவர்கள் அருகில் வந்தாள். மண்டபத்தில் இருள் கவிழ்ந்த இடத்தில் மூன்று பேரும் ஏதோ ஜாடைமாடையாகப் பேசிக் கொண்டார்கள். பிறகு இவள் போய்ப் பல்லக்கில் ஏறுவதைப் பார்த்தேன். மின்னல் வெளிச்சத்திலிருந்து 'பல்லக்கிலிருந்து இறங்கியவள் வேறு மறுபடியும் ஏறியவள் வேறு' என்று தெரிந்து கொண்டேன். பல்லக்குத் தூக்கிகள் இதையொன்றும் கவனிக்கவில்லை மழை சிறிது நின்றதும் பல்லக்கைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டுப் போய் விட்டார்கள்!"

"ஆகா! அப்படியா என்னை ஏமாற்றி விட்டார்கள்? இத்தனை நேரம் சொல்லாமல் சும்மா இருந்தாயே? அந்த இரண்டு பேரும் பிறகு என்ன செய்தார்கள்?"

"பல்லக்குப் போன பிறகு அவர்களும் போய் விட்டார்கள் பின்னர் நானும் புறப்பட்டேன்"

"திருமலை! நீ ஏன் இதையெல்லாம் பார்த்துக் கொண்டு சும்மாயிருந்தாய்? இவள் அத்தையை நீ ஏன் தடுத்து நிறுத்தவில்லை? நீயும் இவர்களுடைய சூழ்ச்சியில் கலந்துவிட்டாயா, என்ன?"


"அபசாரம், குருதேவரே! அபசாரம்! அத்தகைய துரோகத்தை நான் செய்யக்கூடியவனல்ல. முதலில், இதெல்லாம் தங்கள் ஏற்பாடு என்று எனக்குத் தெரியாது. பழுவூர் அரண்மனைப் பல்லக்கு ஆனபடியால், சின்னப் பழுவேட்டரையருடைய காரியமாயிருக்கும் என்று எண்ணினேன்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## ராமுவின் பெரும் உதவி



சுந்தராபுரம் என்னும் ஒரு ஊரில் மயில்வாணன் என்னும் ஒரு வியாபாரி இருந்தார் அவருக்கு ராமு என்னும் ஒரு மகன் இருந்தான். ராமு அந்த ஊரில் உள்ள நடு நிலைப் பள்ளியில் ஏழாம் வகுப்பு படித்து வந்தான். மயில்வாகணன் அருகில் உள்ள ஒரு நகரத்தில் கடை ஒன்று நடத்தி வந்தார். தினமும் காலையில் சைக்கிளில் அந் நகரத்துக்கு சென்று கடையைத் திறந்து வியாபாரத்தை பார்த்துவிட்டு இரவு ஒன்பது மணிக்கு மேல் தான் வீடு திரும்புவார். அவரது கடையில் விவசாயத்துக்கு தேவையான உரங்கள் பூச்சி மருந்துகள் போன்றவை விற்பனையாகும்.

ராமு நல்ல மாணவனாய் மட்டும் இல்லாமல், அவன் அம்மாவுக்கு வீட்டில் எல்லா உதவியும் செய்வான். அதுமட்டுமல்லாமல் அந்த ஊரில் உள்ள வயதானவர்களுக்கும், மற்றவர்களுக்கும் தன்னால் இயன்ற உதவிகள் செய்வான். ராமுவின் செயல்களினால் அவனின் பெற்றோர் களுக்கும் அந்த ஊரில் நல்ல பெயர் இருந் தது.

ஒரு முறை அவர்கள் ஊரில் ஒரு விவசாயி தன் நிலத்தில் தண்ணீர் தேவைக்காக ஒரு ஆழ் துளைக் கிணறு போட்டார். தண்ணீர் கிடைக்காததால், அதனை அப்படியே விட்டு விட்டு அடுத்த இடத்திற்கு சென்று நிலத்தை துளையிட்டார். முன்னர் துளை போட்ட இடத்தை மூடாமல் விட்டு விட்டார். அந்த இடத்தின் பாதையோரத்தில் மரங்களும் இருந்ததால், நடந்து வருவோர் சற்று அமர்ந்து செல்ல பெரிய கற்களும் பதித்து வைத்திருப்பர்.

இதனால் அந்த விவசாயின் தோட்டத்து வழி எப்பொழுதும் ஆட்கள் நடமாட்டமாகவே இருக்கும். ராமுவைப்போலவே நிறைய மாணவர்கள் அவருடைய தோட்ட வழியாகத்தான் பள்ளிக்கு செல்வர். அவர்கள் இந்த ஆழ்துளைக் கிணறு திறந்திருப்பதைப் பார்த்து விட்டு விவசாயிடம் சென்று ஐயா, நீங்கள் தண்ணீருக்காக நிலத்தில் துளையிட்டுவிட்டு அப்படியே திறந்து போட்டுவிட்டு வந்து விட்டீர்கள். தயவு செய்து அதை மூடிவிடுங்கள் என்று கேட்டனர். அவர் நல்லவர் தான் என்றாலும், போவோர் வருவோர் சொல்லி நாம் கேட்பதா என்னும் மனப்பான்மையால் அதை காதில் போட்டுக் கொள்ளவில்லை.

இப்படி இருக்கையில் ஒரு நாள் ஒரு அம்மாள் தன் கைக் குழந்தையை எடுத்துக் கொண்டு அந்த வழியாக வந்து கொண்டிருந்தார். அன்று நல்ல வெயில், வந்தவர் ஒரு மர நிழலில் சிறிது நேரம் களைப்புற்று கைக் குழந்தையுடன் அருகில் இருந்த ஒரு கல்லின் மேல் உட்கார்ந்து விட்டார். அந்த வெயிலுக்கு, மர நிழல் சுகமாக இருந்தது. தன்னுடைய குழந்தையை அப்படியே தன் உடல் மீது சாய்த்துக்கொண்டு நிழலின் சுகத்தில் கண்ணை மூடியவர் அசந்து விட்டார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் உலகில் பார்க்க விரும்பும் மாற்றம் முதலில் நம்மிடம் நிகழ வேண்டும். – மகாத்மா காந்தி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்கள் நீதிபதிகளுக்கே அந்தப் பெருமை சேரும்

எங்கள் தமிழ் நீதிபதிகள் மூவர் மேல் நீதிமன்ற நீதிபதிகளாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர். அவர்களின் பதவி உயர்வு மென்மேலும் நம் தமிழ் மண்ணுக்கு வலுச்சேர்க்கும் என்பது நிறுதிட்டமான உண்மை.

ஆம், எங்கள் தமிழர் தாயகம் பட்ட துன்பங்களும் துயரங்களும் கொஞ்சமல்ல. உயிர் இழப்புகள், சொத்தழிவுகள் என்பவற்றுக்கு அப்பால் கொலை, கொள்ளை, வாள்வெட்டு, கடத்தல், மீற்றர்வட்டி, காணி மோசடி, சண்டித்தனம், போதைவஸ்து வியாபாரம், மண்கடத்தல் என நம் தேசம் பெரும் பிராயத்தைச் சந்தித்தது.

அதிலும் குறிப்பாக, 2009 இல் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் மேற்குறித்த நாசகாரங்கள் கோரதாண்டவம் ஆடின. இதில் 90 சதவீதமானவற்றுக்கு நம்மவர்களே மூலகாரணர்.

படையினரின் ஆதரவுடன் இலஞ்சம் பெறுகின்ற பொலிஸாரின் துணையுடன் அட்டூழியங்கள் அரங்கேற்றப்பட்டன.

இவற்றைக் கட்டுப்படுத்த முடியாதா? என்ற ஏக்கத்துடன் வாழ்ந்த எம் மக்களுக்கு அபயமளித்தவர்கள் எங்கள் தமிழ் நீதிபதிகள் என்ற உண்மையை இந்த இடத்தில் கூறித்தானாக வேண்டும்.

ஆம், போருக்குப் பின்பாக எங்கள் மண்ணில் நடந்த அக்கிரமங்கள் எல்லை மீறிச் செல்லாமல், தமிழ் மண்ணைப் பாதுகாத்த பெருமை எங்கள் தமிழ் நீதிபதிகளையே சாரும்.

உண்மை. தமிழ் இனத்தை ஏதோவொரு வகையில் கந்தறுப்பதற்கு எடுக்கப்பட்ட அத்தனை விடயங்களிலும் எங்கள் நீதிமன்றங்கள் மிகவும் கடுமையான நடவடிக்கைகளை எடுத்தன.

அதிலும் குறிப்பாக போதைவஸ்து வியாபாரிகள் எங்கள் மாணவர்களை நோக்கி தங்களின் போதை வியாபாரத்தை விஸ்தரித்த போது, எங்கள் இளம் நீதிபதிகள் கண்ணும் கருத்துமாக இருந்து மாணவர்கள் மத்தியில் பரவிய போதைப்பொருள் பாவனையை வேரறுத்தனர்.

உண்மையில் அன்று எங்கள் நீதிமன்றங்கள் இத்துணை கருசனை எடுக்காமல் இருந்திருந்தால் இன்று நிலைமை மோசமாகியிருக்கும்.

இவை தவிர, உறவுகளை நினைவேந்துகின்ற உரிமை, செம்மணி மனிதப் புதைகுழியை அகழ்வதற்கான உத்தரவுகள், கடமை மீறிய பொலிஸாருக்கான எச்சரிக்கைகள் எனப் பல்வேறு சவால்களை எங்கள் நீதிபதிகள் மிகத் துணிச்சலுடன் கையாண்டனர்.

இவ்வாறான துணிச்சலும் மக்கள் சமூகத்தைப் பாதுகாக்க வேண்டுமென்ற உயர்ந்த சிந்தனையும் அவர்களிடம் மேலோங்கி இருந்ததற்குள், அவர்களிடம் இருந்த நேர்மையும் யார்க்கும் அஞ்சாத ஞானமும் ஆத்ம பலமும் காரணமாகும் என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

ஒட்டுமொத்தத்தில் எங்கள் மக்களின் ஒரே நம்பிக்கையாக இருக்கின்ற எங்கள் நீதித்துறை நிச்சயம் எங்கள் மண்ணில் எஞ்சியிருக்கின்ற பிறழ்வுகளையும் இல்லாதொழித்து, தூய்மையும் பண்பாடும் இறையுணர்வும் நிறைந்த தமிழ்ச் சமூகத்தை மீளக் கட்டியெழுப்ப பாடுபடும் என்பது சத்தியமான உண்மை.

# ஐ.நா கூட்டத்தொடர் ஆரம்பமாவதற்கு முன் அரசாங்கத்தின் நிலைப்பாடு அறிவிக்கப்படும்

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

ஐ.நா.கூட்டத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் அரசாங்கத்தின் நிலைப்பாடு அறிவிக்கப்படும் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று வியாழக்கிழமை (04) இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர்மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் மீளாய்வுக் கூட்டத் தொடர் ஆரம்பமாக முன்னர் அல்லது அதற்கிடைப்பட்ட காலப்பகுதியில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள பிரேரணை குறித்த நிலைப்பாட்டை வெளிவிவகார அமைச்சு அறிவிக்கும். கடந்த காலங்களை விட தற்போது இலங்கையில் ஜனநாயக மீறல்கள், மனித உரிமை மீறல்கள் போன்ற நிலைமைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளமையை சர்வதேசமும் ஏற்றுக் கொண்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

மேலும் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்த அவர், அதுவரை சில சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது இந்தச் சட்டத்தை பயன்படுத்துவதைத் தவிர்க்க முடியாது என்றும் சுட்டிக்காட்டினார்.

கடந்த ஆண்டுகளில் எமது நாட்டில் காணப்பட்ட ஜனநாயக மீறல்கள், மனித உரிமை மீறல்கள் போன்ற நிலைமை தற்போது கனிசமான அளவு மாற்றமடைந்துள்ளதாக சர்வதேசம் ஏற்றுக் கொண்டுள்ளது.

மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரும் அந்த அடிப்படையிலேயே அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

அதேபோன்று அவர்கள் தரப்பில் சில கண்காணிப்புக்களும் காணப்படுகின்றன. அரசாங்கமும் வெளிவிவகார அமைச்சும் இது தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளன. மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடர் ஆரம்பமாக முன்னர் அல்லது அதற்கிடையில் இது தொடர்பில் அரசாங்கம் அதன் நிலைப்பாட்டை அறிவிக்கும்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நிச்சயம் நீக்கப்பட்டு புதிய சட்டம் நடைமுறைப்படுத்தப்படும். எவ்வாறிருப்பினும் அதுவரை சில சட்ட நடவடிக்கைகளுக்காக பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்த வேண்டி யேற்பட்டுள்ளது.

புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான கால அவகாசம் குறித்து இப்போது கூறமுடியாது. விரைவில் அதனையும் அறிவிப்போம் என்றார். (ம-7)

# மண்டைதீவு படுகொலையுடன் தொடர்புடைய கிணற்றை அகழ்க

## ஊர்காவற்றுறைப் பொலிஸ் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சடலங்கள் புதைக்கப்பட்டதாக கூறப்படும் கிணறுகளை அகழ வலியுறுத்தி ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு குறித்த சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணை முன்னெடுக்கப்பட்டு உண்மைகள் வெளிக் கொணரப்படுவதுடன் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு நீதியும் பரிகாரமும் வழங்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் தனது மகனை பறிகொடுத்த 81 வயதுடைய ஸ்ரிபன் மரில்டா மற்றும் வேலணை பிரதேச சபையின் உறுப்பினரான சுவாமிநாதன் பிரகலாதன் ஆகியோரால் இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு குறித்த நபர்கள் வேலணை பிரதேச சபையின் ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியின் உறுப்பினரான அனுசியா ஜெயகாந்த், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களான கருணாகரன் நாவலன் மற்றும் திருநாவுக்கரசு சிவகுமாரன், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான செந்தமிழ்ச்செல்வன் திருக்கேதீஸ்வரன், தமிழரசுக் கட்சியின் உறுப்பினரான மங்களேஸ்வரன் கார்த்தீபன் ஆகியோரது பிரசன்னத்துடன் இருவேறு முறைப்பாடுகள் நேற்று(4) ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்துள்ளனர்.

35 வருடங்களுக்கு முன்னர் ஓகஸ்ட் மாதம் 25 மற்றும் 26 ஆகிய நாட்களில் இராணுவத்தால் முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய பகுதிகளில் பாரிய மனிதப் படுகொலை நிகழ்த்தப்பட்டதாகவும் இதன்போது 80 இற்கும் அதிகமான இளைஞர்களும் யுவதிகளும் காணாமலாக்கப் பட்டிருந்ததுடன் மேலும் பலர் கொல்லப்படும் இருந்தனர்.

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் 45 இற்கும் அதிகமான சடலங்கள் மண்டைதீவு 2 ஆம் வட்டாரப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருப்பதுடன் அதற்கான வாழும் சாட்சியங்கள் உறுதியாகவும் இருக்கின்றன.

அதேபோன்று அதற்கு அயலில் உள்ள பாடசாலைக் கிணறு ஒன்றுக்குள்ளும் சடலங்கள் இருக்கின்றன. இந்த நிலையில் குறித்த படுகொலை சாட்சியமாக உறவுகளைப் பறிகொடுத்த குறித்த கிணற்றை அகழ்ந்து சடலங்களை வெளிக் கொணர்ந்து உண்மைகள் வெளி உலகுக்கு வெளிக் கொணரப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியே குறித்த முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

முன்பதாக கடந்த மாதம் 20 ஆம் திகதி வேலணைப் பிரதேச சபையில் குறித்த புதைகுழியை அகழ்ந்து உண்மைகள் வெளிக்கொணரப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி முன்வைக்கப்பட்ட பிரேரணை சபையில் அனைத்து உறுப்பினர்களின் ஏக ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# கொக்குவில் மஞ்சவனப்பதியில் நாளை இரதோற்சவப்பெருவிழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய வருடாந்த மகோற்சவத்தில் நாளை சனிக்கிழமை இரதோற்சவப் பெருவிழா இடம்பெறவுள்ளது.

அதன்பிரகாரம் அதிகாலை 04.00 மணிக்கு முருகப்பெருமானுக்கு விசேட அபிஷேகமும் காலை 6.00 மணிக்கு வசந்தமண்டபப்பூஜையும் இடம்பெறவுள்ளது.

வசந்தமண்டபத்தில் சோடச உபசாரம் ஏற்று சண்முகப் பெருமான் சித்திவிநாயகர் சகிதம் காலை 8.00 மணிக்கு பெருந்தேரில் ஆரோகணித்தலைத் தொடர்ந்து முத்தேர்பவனி சிறப்புற இடம்பெறவுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 52

சொக்கன்

அப்படியே இஸ்ரேலுக்கு பார்சல் செய்தார்கள். லண்டனில்சன்டே டைம்ஸ் ஆசிரியர் குழு மொர்டெசாயைக் காணாமல் திகைத்தது. இப்போ என்ன பண்றது?

அந்த ஆள் இல்லாட்டி என்ன? அவர் சொன்ன தகவல் எல்லாம் உண்மைன்னு உறுதி செய்தீர்களா? ஆம். அப்படீன்னா நோ ப்ராப்ளம் நாம இனி மேலும் தயங்கினா எதாவது புதுப் பிரச்சினை வரும் இஸ்ரேலோட அணுகுண்டு ஆராய்ச்சி பத்தின செய்தி ஃபோட்டோக்களை உடனடியாக வெளியிட்டுடலாம்.

1986 அக்டோபர் 5 ஆம் திகதி டிமோனோவில் உள்ள அணு ஆராய்ச்சி நிலையத்துக்குள் என்னென்ன நடக்கிறது என்பதைப் புட்டுப் புட்டு வைத்தது சன்டே டைம்ஸ்.

தெள்ளத்தெளிவான விவரங்கள் புகைப்படங்கள் என மூன்று பக்கங்களுக்கு இஸ்ரேலின் மானம் கப்பல் ஏறியது.

உடனடியாக உலகம் முழுக்க இஸ்ரேலுடைய அணு ஆயுத ஆராய்ச்சி உற்பத்திக்குக் கடுமையான எதிர்ப்பு கிளம்பியது.

டிமோனோவை இழுத்து மூடவேண்டும் என்றெல்லாம் பல நாடுகள் அமைப்புகள் ஆவேசமாகக் குரல் கொடுத்தார்கள். வழக்கம்போல் இஸ்ரேல் வாயைத் திறக்கவில்லை.


சன்டே டைம்ஸ் செய்தி வெளியான போது மொர்டெசாய் வனுனு இஸ்ரேலில் பத்திரமாக அடைத்துவைக்கப்பட்டிருந்தார். மொசாட் அதிகாரிகள் அந்தச் செய்தித் தாளை அவர் முகத்தில் வீசி எறிந்து அவமானப்படுத்தினார்கள்.

மொர்டெசாய் மீது வழக்குத் தொடுப்பதற்கான முன்னேற்பாடுகளில் இறங்கியது.

அதே நேரம் அங்கே மொர்டெசாயைக் காணாமல் எல்லோரும் குழம்பிக் கொண்டிருந்தார்கள்.

பத்திரிகையாளர்கள் அவரை ஃபோட்டோ எடுக்கும்போது அந்தக் கையை விரித்துக் காண்பித்தார்.

செப்டம்பர் 30 ஆம் திகதி நான் லண்டனில் இருந்து ரோம் வந்தேன். அங்கே



அப்போதும் மொர்டெசாய் பயப்படவில்லை. நான் செஞ்சது சரிதான் என்று பிடிவாதமாக நின்றார்.

எது சரி? உன் நாட்டு இரகசியத்தை அடுத்தவனுக்குக் காட்டிக் கொடுக்கிறதா?

நான் இந்த மேட்டரையெல்லாம் ஏதோ ஓர் எதிரி நாட்டுக்கு வித்திருந்தா நீங்க என்மேல குற்றம் சொல்லலாம் ஆனா நான் இந்தத் தகவல் வெளியே வரணும் எல்லோருக்கும் தெரியணும் நீங்க அணு ஆயுதம் தயாரிக்கறதைத் தடுக்கணும்ங்கற நல்ல எண்ணத்தில தானே செய்தேன்? அது தப்பு என்று எனக்குத் தோணலை.

எங்களைப் பொறுத்தவரைக்கும். அது தப்புதான் துரோகம் தான் இஸ்ரேல்

இத்தாலிக்குப் போறேன்னு கிளம்பின மனுஷன் மாயமா மறைஞ்சுட்டாரே என்ன ஆச்சு? ஒரு வேளை மொசாட் கைவரிசையைக் காட்டியிருக்குமோ?

இஸ்ரேல் ஒன்றும் தெரியாததுபோல் மௌனம் சாதித்தது. சில வாரங்கள் அமைதியாக இருந்துவிட்டு நிலைமை கொஞ்சம் சீரான பிறகு மொர்டெசாயை நீதிமன்றத்துக்குக் கொண்டுவந்து நிறுத்தினார்கள்.

ஆனால் மொர்டெசாய் வனுனு அவர்களைவிடக் கில்லாடி இஸ்ரேலின் குட்டை உடைக்க வேண்டும் என்பதற்காகவே தன்னுடைய உள்ளங்கையில் சில தகவல்களைக் கிறுக்கிக்கொண்டு கோர்ட்டுக்கு வந்தார்.

இவர்கள் என்னைக் கடத்திவிட்டார்கள்!

இதனால் மொசாட்டின் கடத்தல் நாடகம் வெட்டவெளிச்சமாகி விட்டது. மொர்டெசாய் விவகாரம் சர்வதேச லெவலில் பரபரப்பாகத் தொடங்கியது.

இஸ்ரேல் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. மொர்டெசாய் மீது தேசத் துரோகம் உளவாடல் குற்றங்களைச் சுமத்தி வழக்கு நடத்தினார்கள் அவருக்கு மரண தண்டனை விதிக்கப் படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் மொர்டெசாய் யூதராக இருந்ததால் அவருடைய உயிர் பிழைத்தது. பதினெட்டு வருடக் கடுங்காவல் தண்டனை கொடுத்துத்

தனிமைச் சிறையில் அடைத்துவைத்தார்கள்.

அது சரி சிண்டி (செரில்) என்ன ஆனார்?

மொர்டெசாய் கடத்தல் சம்பவத்துக்குப்பிறகு ரொம்ப நாளைக்குச் செரிலைப்பற்றி எந்தத் தகவலும் தெரியவில்லை.

சில வருடங்கள் கழித்துப் பத்திரிகையாளர்கள்தான் அவரைத் தேடிப் பிடித்துச் செய்தி வெளியிட்டார்கள்.

தற்போது செரில் அமெரிக்காவில் ரியல் எஸ்டேட் ஏஜென்டாகப் பணிபுரிகிறார். கணவர் குழந்தைகளோடு நிம்மதியாக செட்டிலாகிவிட்டார்.

செரில் மட்டுமில்லை. மொசாட்டுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ உதவிய எல்லோருக்குமே இஸ்ரேல் பாதுகாப்பான வாழ்க்கைகளை அமைத்துக் கொடுக்கிறது.

அவர்கள் உலகின் எந்த மூலைக்குச் சென்றாலும் அவர்களுடைய கடந்தகாலம் வெளியே தெரிந்துவிடாதபடி மிகக் கவனமாகப் பூசி மெழுகிவிடுகிறார்கள்.

அதே சமயம் மொசாட்டுக்காக ஆபத்தான உளவுப் பணிகளில் ஈடு பட்டு உயிர் இழந்தவர்களும் நிறையப் பேர் உண்டு. அவர்களையெல்லாம் என்ன செய்வார்கள்? அப்படியே நைசாக மூடி மறைத்து விடுவார்களா? அல்லது முறைப்படி கௌரவிப்பார்களா?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.இந்து...

ஆரம்ப பாடசாலைக்கும், யாழ். மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளதாக யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் லதாநந்தினி சிவபாதம் தெரிவித்துள்ளார்.

குறித்த மாணவனின் தந்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மருத்துவராகக் கடமையாற்றி வருகின்றார். இந்நிலையில் மருத்துவராவதே தனது இலக்கு என குறித்த மாணவனும் தெரிவித்துள்ளார்.

(ம-7,33,104)

## 51, 969 பேர்...

புள்ளிகளும் தமிழ்மொழி மூலப் பாடத்திற்கு 134 வெட்டுப்புள்ளிகளும் எனப் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புலமைப்பரிசில் பரீட்சையில் சிங்கள மொழி மூலப் பாடத்தில் அதிகபட்சமாக 198 புள்ளிகள் பெறப்பட்டுள்ளதாக காலி மாவட்டத்திலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் தமிழ்மொழி மூலப் பாடத்தில் அதிகபட்சமாக 194 புள்ளிகள் பெறப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## வெட்டுப்புள்ளிகள்...

இதனிடையே தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாவட்ட ரீதியிலான வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளன.

அதற்கமைய கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தளை, காலி, மாத்தறை, குருநாகல் மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் தமிழ்மொழி மூலமான பாடசாலைகளுக்காக 134 புள்ளிகள் வெட்டுப்புள்ளியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்மொழி மூலமான பாடசாலைகளுக்காக நுவரெலியா, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, அம்பாறை, பதுளை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களுக்கான வெட்டுப்புள்ளியாக 132 புள்ளிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மன்னார், திருகோணமலை, புத்தளம், அநுராதபுரம் மற்றும் பொலநறுவை ஆகிய மாவட்டங்களுக்கான தமிழ் மொழி மூலமான பாடசாலைகளுக்கான வெட்டுப்புள்ளியாக 131 புள்ளிகள் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## நவீன கடலுணவு...

டிங்ஸ் நிறுவனத்தின் திறப்பு விழா நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் கடற்தொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோர் கலந்துகொண்டு பெயர் பலகையை திரை நீக்கம் செய்து வைத்து நிறுவனத்தையும் திறந்து வைத்தனர். அத்துடன் நிறுவனத்தின் செயற்பாடுகளையும் பார்வையிட்டனர்.

நிகழ்வில் நீரியல் மற்றும் கடல்சார் வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எஸ்.ஜே.கஹவத்த, யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன், யாழ்ப்பாண பிரதேச செயலர் சா.சுதர்சன், யாழ். மாவட்ட கடற்தொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் அகிலன் உள்ளிட்டோர் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். (ம-7)

## 4 மனித எச்சங்...

புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வின் 43ஆவது நாள் அகழ்வு யாழ். மாவட்ட மேலதிக நீதவான் எஸ். லெனின்குமார் முன்னிலையில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய அகழ்வில் புதிதாக 4 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு ஏற்கெனவே அடையாளப்படுத்தப்பட்ட 11 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்ட 11 எலும்புக்கூட்டுத் தொகுதியுடன் இதுவரையில் 224 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இதுவரையில் 235 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## விசாரணைகளை...

தாபிக்கப்பட்டுள்ளது.

காணாமல்போன மற்றும் காணக்கிடைக்காமை ஆட்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு அவர்களுடைய உறவுகளுக்கு அறிக்கைகளை வழங்குதல் இவ் அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதுவரை குறித்த அலுவலகத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ள 16,966 முறைப்பாடுகளில் விசாரணைகளுக்காக மேலும் 10,517 முறைப்பாடுகள் காணப்படுகின்றன.

அதற்கமைய இன்னலுற்றவர்களுக்கு நீதியை நிலைநாட்டுவதற்காக 2027ஆம் ஆண்டு இறுதிக்குள் விசாரணை மற்றும் குறித்த கடமைகளை நிறைவேற்றுவதற்கான விசேட கருத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும், குறித்த பணிகளுக்காகவும் ஓய்வு நிலை நீதிபதிகள், சிரேஷ்ட நிர்வாக அலுவலர்கள், சட்டத்தரணிகள் உள்ளிட்ட தகைமையுடன் கூடிய நபர்கள் 75 பேருடன் கூடிய உப பணிக்குழு 25 குழுக்களை நியமிப்பதற்கும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம-7)

## காணா...

கொண்ட நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார இந்த விடயம் தொடர்பில் கருத்துரைத்துள்ளார்.

அதற்கமைய குருக்கள்மடம் புதைகுழி தொடர்பான முறைப்பாடுகளை நீதி அமைச்சு ஏற்று, அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

மேலும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு, கண்ணியமான தீர்வுகளை அரசாங்கம் பெற்றுக் கொடுக்கும் எனவும் நீதி அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதற்கமைய வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் தற்போதைய அரசாங்கத்தின் மீது வைத்திருக்கும் நம்பிக்கையின் காரணமாக காணாமல் போனவர்கள் தொடர்பில் அதிகமாக முறைப்பாடுகளை சமர்ப்பித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், காணாமல்போனோர் தொடர்பில் ஆராயும் அலுவலகத்தின் தலைமையீட்டின் கீழ் செம்மணி மனித புதைகுழியின் அகழ்வாராய்ச்சி சர்வதேச தர நிர்ணயங்களுக்கு அமைய வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதாகவும் நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நீதி மற்றும் உண்மையைத் தேடுவது இந்த அரசாங்கத்தின் இறுதிப் பொறுப்பாகும் என நீதி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

மஹஜன சம்பத
திகதி 2025.09.04
சீட்டிழுப்பு இலக்கம் 5942
S 3 8 1 7 8 6
அத சம்பத
S 1 7 8 6
சீட்டிழுப்பு இலக்கம் 0517
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.09.04
சீட்டிழுப்பு இலக்கம் 0058
கன்னி 14 31 39 43

தன நிதானய
திகதி - 2025.09.04
சீட்டிழுப்பு இலக்கம் - 1972
S 03 14 15 63 S
Double Chance

மெகா பவர்
திகதி 04/09/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2290
B 02 30 36 37 41

ஜய
திகதி 2025.09.04
சீட்டிழுப்பு இலக்கம் 0210
M 3 0 3 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4184
சீட்டிழுப்பு திகதி 04.09.2025
W 02 04 12 47
W
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.09.04
சீட்டிழுப்பு இலக்கம் 1251
விருச்சிகம் 01 28 29 48 விருச்சிகம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
04.09.2025
வெற்றி வாரம் 0650
M 9 8 7 9 3 0
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23.514.601.60
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2916
சீட்டிழுப்பு திகதி 2025.09.04
தினம் வியாழக்கிழமை
26 31 38 78 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,199,116.00
DLB

சனிதா
திகதி 04.09.2025
வெற்றி வாரம் 5077
39 42 63 71 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,296,525.60
DLB

சசிரி
0762
சீட்டிழுப்பு திகதி 04.09.2025
வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 09 13 40
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4628
சீட்டிழுப்பு திகதி 04.09.2025
தினம் வியாழக்கிழமை
01 17 39 50 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,773,031.60
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
J 40 05 12 15 58
2092
04.09.2025
வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.591,981,717.80
DLB

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் 2742
சீட்டிழுப்பு திகதி 2025.09.04
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.89.225.420.80
05 17 39 41 F
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை சந்திக்கு அருகாமையில் k.k.s வீதியில் இருந்து 100m ல் 1 ½ பரப்பு, 1 ¾ பரப்பு மற்றும் 2 பரப்புக் காணித் துண்டுகள் விற்பனைக்கு உள்ளது.

(5329)

**076 663 3199**



## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)

சம்பளம் 30,000/- 50,000/-

வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

எமது நேரடி கிளைகள்

- கொழும்பு
- மட்டக்களப்பு
- திருகோணமலை
- கிளிநொச்சி
- புதுக்குடியிருப்பு
- கொடிகாமம்
- புத்தூர்
- சாவகச்சேரி
- கோப்பாய்
- சுன்னாகம்
- யாழ்ப்பாணம் (Main Branch)
- சங்கானை
- பண்டத்தரிப்பு
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

(C-3807)

**V2 TRAVELS** 076 1410725 076 8226236

v2vacancies@gmail.com


# பேருந்து - வான் விபத்து நால்வர் படுகாயம்

கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்றுகொண்டிருந்த வான் ஒன்று இ.போ.ச.பஸ்வண்டியொன்றில் மோதி விபத்துக்குள்ளானதில் நான்கு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாக அநுராதபுரம் பரசன்கஸ்வெவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பரசன் கஸ்வெவ பொலிஸ் பிரிவின் அநுராதபுரம் ரம்பாவ மதவாச்சி வீதியின் பரசன்கஸ்வெவ சந்தியில் நேற்று வியாழக்கிழமை காலை 8.20 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் வெள்ளவத்தைப் பகுதியை வசிப்பிடமாக கொண்டவர்கள் எனவும் கொழும்பிலிருந்து யாழ் நோக்கி சென்றுகொண்டிருந்த வான் பரசன்கஸ்வெவ சந்திக்கு அருகிலுள்ள பஸ் தரிப்பில் நிறுத்தியிருந்த பஸ் வண்டியின் பின்புறத்தில் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-7)


# தென்னிந்திய யாத்திரை

தமிழ்நாடு, ஆந்திரா, பாண்டிச்சேரியுடான யாத்திரை

ஆரம்பம் 10.10.2025 | யாத்திரிகர்:- 10 | நாட்கள் 12 | Amount 250,000



**தரிசிக்கும் இடங்கள் :** உச்சிப்பிள்ளையார், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர், திருப்பதி, ஸ்ரீரெங்கம், சமயபுரம், பிரம்மாகோயில், இராமேஸ்வரம், பழனி, திருத்தணி.திருப்பரம்குன்றம், திருச்செந்தூர், சிதம்பரம், ஏகாம்பரேஸ்வரர், காலகஸ்தி, திருவெண்ணாமலை, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, திருவெண்ணைக்காவல், மேல்மருவத்தூர், தஞ்சாவூர், நவபாஷாணம், சூரியன், சந்திரன், சுக்கிரன், புதன், வியாழபகவான், செவ்வாய், ராகு, கேது, சனிபகவான், திருநள்ளாறு, நளன் குளத்தின் நீராடல், தோணியப்பர், மனக்குழ விநாயகர், திருக்கடையூர் பஞ்சவடி விநாயகர், வடபழனி முருகன் உட்பட 45 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன் மெரீனாபீச், பாண்டிச்சேரி பீச், MGR ஜெயலலிதா, அண்ணா சமாதிகளையும் அப்துல் கலாமின் மணிமண்டபமும் பார்க்கலாம்.

**சென்னையின் ஒரு நாள் Shopping**

தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை இருவழி விமான ரிக்கட் மூன்று வேளை சுத்தமான சைவ உணவு, குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகள், AC வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏர்போட் போகவும் வரவும் வாகன வசதி இவை அனைத்தும் எமது சேவை.

# வட இந்திய தலயாத்திரை

ஆரம்பம் 10.11.2025 | நாட்கள் 12 | Amount 350,000

காசி/வாரணாசி
- விசாலாட்சி சமேத விஸ்வநாதர்
- அன்னபூரணி
- கால பைரவர்
- சங்கடஹர மோட்ச ஆஞ்சநேயர்
- துர்க்கா மந்திர்
- கங்கை ஆரத்தி
- துளசிதாசர் மந்திர்
- சோழியம்மன்
- பாதாள வராகி அம்மன்
- 64 படித்துறை
- கங்கையில் தர்ப்பணம்

அயோத்தி
- ஸ்ரீ ராம ஜென்மபூமி
- சரயு ஸ்நானம்
- அனுமன் மந்திர்
- சீதை பூமியுள் புதையுண்ட இடம்
- மதுரா
- தாஜ்மஹால்
- ஷீரடி சாய் பாபா
- சனி சிங்கானாப்பூர்

திருவேணி சங்கமம்
- கங்கை, ஜமுனா, சரஸ்வதி சங்கம ஸ்நானம்
- பாதாள ஆஞ்சநேயர்
- இராமேஸ்வரம்
- உத்திர கோஷ மங்கை
- திருப்புலானி
- மதுரை மீனாட்சி
- சென்னையில் ஒருநாள் Shopping

- உள்நாட்டு & சர்வதேச விமான பற்றுச்சீட்டு
- குளிரூட்டப்பட்ட வாகனம்
- மூன்று வேளை உயர்தர சைவ உணவு சமைத்துத் தரப்படும்.
- தண்ணீர்ப் போத்தல் & தேநீர் பழச்சாறு.
- குளிரூட்டப்பட்ட தங்குமிடம்
- நுழைவுச்சீட்டுகள்
- இலங்கை சுற்றுலா வழிகாட்டி
- இந்திய சுற்றுலா வழிகாட்டி (தமிழ் & ஹிந்தி தெரிந்தவர்)

தொடர்புகளுக்கு: கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் : ராஜன்
59,3/6, செட்டியார் தெரு, கொழும்பு -11.
sriangananthan1944@gmail.com, sriranganathan2601@gmail.com
Tel: 077-7680102, 077 7362154

(1514)



# பொருளியல் கருத்தரங்கு

**A/L - 2025**

வளவாளர்

## S. JEYAKUMAR

B.A. (Hons) Econ spi,M.Ain Econ (Pera) PGDE

- பரீட்சை எதிர்பார்ப்பு வினா - விடைகள்.
- புள்ளித்திட்ட விளக்கம்.
- தேர்ச்சி அடிப்படையிலான மீட்டல்.
- கையேடுகள் வழங்கப்படும்.
- 40 மணித்தியாலங்கள் நடைபெறும்.

(C-3808)

ஆரம்பம் : 09.09.2025
செவ்வாய் 02:00 P.m.
இடம் : NEW SCIENCE HALL JAFFNA.

(5322)

- வெளி மாணவர்களும் பங்குபற்ற முடியும்.
- நேரடியாகப் பங்குபற்ற முடியாத மாணவர்களுக்க Zoom செயலிமூலம் நடைபெறும்.

**077 723 8597, 076 535 0999**
**077 778 9815**



NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL

OCTOBER INTAKE 2025

SLIIT உயர்கல்வி நிறுவனத்தின் இளமாணி பட்டப்படிப்புகளுக்கான அனுமதிகள் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன

**BBA(Hons) Specialising in**
- Accounting & Finance
- Business Analytics
- Business Management
- Marketing Management
- Logistics & Supply Chain Management

(Duration : 4 Years)

APTITUDE TEST OPEN NOW

UGC APPROVED

REGISTER NOW!

(C-3808)

வடக்கில் தரமான கல்வியுடன் உறுதியான வேலைவாய்ப்பு எமது SLIIT NORTHERNUNI இல் மட்டுமே

SLIIT NORTHERN UNI,
239 Arasadi Road,
Kantharmadam Junction, Jaffna

021 7534 807

northernuni.lk | apply@northernuni.com



# காணி விற்பனைக்கு

A9 வீதி, இயக்கச்சி சந்தியில் இருந்து 3 நிமிடத்தில் அடையலாம்.

- மின்சார வசதிகள் உண்டு
- காணிக்கு செல்லும் வரை கார்ப்பெட் வீதி

96 பரப்பு (தேவைக்கேற்ப பரப்புக்கள் பிரித்து வழங்கப்படும்)

(5325)

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**076 484 8614**
**076 604 0203**



# வேலையாட்கள் தேவை

♦ **முகாமைத்துவ உதவியாளர் (பெண்கள்)**

- 25 வயதிற்கு மேற்பட்டவர்கள்
- ஓய்வுபெற்றவர்கள் (தனியாள்) விண்ணப்பிக்கலாம்
- யாழ்.நகரிற்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை

பொது முகாமையாளர்,
வலம்புரி பத்திரிகை,
இல.191,
பிறவுண் றோட்,
யாழ்ப்பாணம்.

மேலதிக தொடர்புகளுக்கு :
**076 097 3121**



# மணமகள் தேவை

யாழ். வடமராட்சி இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1986, திருவோணம் 3ஆம் பாதம் (2ல் செவ்வாய்) கடையில் பணியாளராகக் கடமையாற்றும் மணமகனுக்கு மணமகள் தேவை. சைவபோசன மணமகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

**077 191 7936**

(1511)



# வேலையாட்கள் தேவை

வவுனியா மற்றும் திருகோணமலையில் இயங்கி வரும் வெளிநாட்டுப் பொதிகள் சேவை நிறுவனம் ஒன்றிற்கு அனுபவமுள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை.

(1518)

**076 889 1308**
**077 839 3974**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.